
ஆர்ச்சியோடு மோதாதே!
லயன் காமிக்ஸ்
இரும்பு மனிதனின் அதிரடி முழுநீள சாகஸம்!
ரூ. 6.00

K.ANANDARAJA



# ஹாட்லைன்

## எச்சரிக்கை: மிக நீளமான ஹாட்லைன் இது!

வாசக நண்பர்களே,

வணக்கம். Man proposes - God disposes என்ற பழமொழி உண்மையானதை சென்ற மாதம் நான் உணர்ந்தேன்! இரத்தப் படலம் - பாகம் 5 வெளியிட அனைத்தும் தயாராகியிருந்த நிலையில் - படைப்பாளர்களின் ஒப்புதல் கிடைக்கத் தாமதம் ஏற்பட்டு விட்டது. ஆகையால் விளம்பரப் படுத்தியிருந்தபடி இரத்தப்படலம் V வெளியிட இயலவில்லை. ('13' (XIII)) என்ற எண் ராசியில்லாதது என்பது பொதுவானதொரு நினைப்பு! நம் XIII விஷயத்தில் ஏற்பட்டு வரும் குளறுபடிகளைப் பார்க்கும் போது அந்த நினைப்பில் கொஞ்சம் நிஜம் இருக்கும் என்றே நினைக்கத் தோன்றுகிறது! இரத்தப் படலம் முந்தைய 4 பாகங்களை வெளியிடும் போது ஏற்பட்ட ஏராளமான பிரச்சனைகள் இன்னமும் என் மனதை விட்டு நீங்கவில்லை!)



So - இரத்தப் படலம் V பற்றிய அறிவிப்பைப் போட்டு இடத்தை அடைக்கப் போவதில்லை! - 'திடு'மென ஓரிரு மாதங்களில் கடைகளில் புக் கிடைக்கும்! இப்போதைக்கு முகத்தில் டன் கணக்கில் வழியும் அசடை துடைத்துக் கொண்டே 'Sorry' சொல்வதைத் தவிர எனக்கு வேறு வழி தெரியவில்லை! Sorry!

ஜனவரி வெளியீடாக ஸ்பைடரின் "எத்தனுக்கு எத்தன்" மறுபதிப்பாக வந்திருந்ததை பார்த்திருப்பீர்களென்று நினைக்கிறேன்! மறுபதிப்பு என்பதால் அதைப் பற்றி எழுத புதிதாக விஷயம் கிடையாது. ஆனால் டிசம்பர் '94 வெளியீடான பிரின்ஸ் In ஆப்பிரிக்கா பற்றி ஒரு சில வரிகள்..!



வழக்கம் போல் பிரின்ஸ் கதைக்கு ஏராளமான பாராட்டுக்கள்! அதனிடையே ஒரு வாசகரின் (முகவரி தெரியவில்லை) போஸ்ட்கார்ட் என் கவனத்தை ஈர்த்தது. விஷ முள் காட்டில் சிக்கிய குடும்பத்தை ஏராளமான சாகஸம் செய்து பிரின்ஸ் & பார்னே காப்பாற்றுவதே "பிரின்ஸ் In ஆப்பிரிக்காவின்" கதை! ஆனால் அந்த முட்புதரில் சிக்கியிருந்தவர்களைக் காப்பாற்ற நமது வாசகர் எளியதொரு வழியை சுட்டிக் காட்டியிருந்தார்.

*"ஒரு ஹெலிகாப்டரைப் பயன்படுத்தி முள்காட்டில் சிக்கிக் கிடக்கும் நபர்களுக்கு மேல் தாழப் பறந்து - அதிலிருந்து ஒரு நூல் ஏணியை இறக்கினால் அதைப் பிடித்து ஹெலிகாப்டரினுள் ஏறி அனைவரும் தப்பியிருக்கலாமே? பிரின்ஸ் & பார்னே இத்தனை மெனக்கெடத் தேவையில்லையே!"*

இதைப் படித்த பிறகு மீண்டும் ஒரு முறை கதையை நான் புரட்டிப் பார்த்தேன்! யெஸ் - நமது வாசகர் Suggest செய்த வழிமுறை நிச்சயம் ஒர்க் அவுட் ஆகும்! அயல்நாட்டுக் கதாசிரியருக்கும் சரி - எனக்கும் சரி - சிறிதும் தோன்றாத ஒரு ஐடியா நமது வாசகருக்கு (பெயர் & முகவரி எழுதி அனுப்புங்களேன்) எழுந்துள்ளது!

நமது வாசகர்களின் திறமை மீது எனக்குள்ள நம்பிக்கை தெரிந்ததே - இருப்பினும் புதிதாக எதையாவது சாதித்து என்னை திகைக்கச் செய்வது வாசகர்களின் பொழுது போக்காக உள்ளது! Carry on the good work!

அப்புறம் - இந்த மாதக் கதைக்கு வருவோம்! இரத்தப் படலம் தாமதத்தால் ஏப்ரலில் வரவிருந்த "ஆர்ச்சியோடு மோதாதே" முந்திக் கொண்டு விட்டது! ஜனரஞ்சகமான - 'ஆர்ச்சி ஸ்டைல்' சமாச்சாரங்கள் நிறைந்த கதை இது! ஆர்ச்சி பிரியர்களுக்கு நீண்ட நாள் கழித்து ஒரு முழு நீள விருந்துதான்!

...நடுப்பக்கத்தில் கேள்வி நேரம் என்ற தலைப்பில் நமது லயனைப் பற்றி சில கேள்விகளைக் கேட்டுள்ளேன். கண்டிப்பாக நமது வாசகர்கள் அனைவரும் பொறுமையாக எழுதியனுப்பி நமது இதழின் வளர்ச்சிக்கு உதவிட வேண்டுமென்பது என் அன்புக் கட்டளை.

முக்கியமான சமாச்சாரத்திற்கு இப்போது வரலாமா...? சென்ற வருடம் ரூ. 20/- விலையில் வந்து அதிரடி வெற்றி பெற்ற நமது **செஞ்சுவரி ஸ்பெஷலைத்** தொடர்ந்து இந்த வருடம் அதை விட அட்டகாசமானதொரு சிறப்பு மலர் தயாராகி வருகிறது! **லயன் Top 10 ஸ்பெஷல்** என்பது இதழின் பெயர்! அது என்ன Top 10 என்று கேட்கிறீர்களா?

a) இதழில் இடம் பெறப் போகும் கதைகள் எவை என்று நான் சொல்லப் போவதில்லை. மாறாக,

b) 16 புதிய கதைகளின் விளம்பரம் தொடரும் பக்கங்களில் உள்ளது. அவற்றில் 10 Top கதைகள் ஸ்பெஷலில் இடம் பெறும்!

c) நான் தேர்ந்தெடுத்துள்ள Top 10 கதைகள் எவை என்பதை சரியாக யூகித்து எழுதியனுப்பும் முதல் 10 வாசகர்களுக்கு பரிசு உண்டு!

வாசகர்களே - உங்கள் ரசனையும், எனது ரசனையும் எவ்வளவு தூரத்திற்கு ஒத்துப் போகிறது என்பதை தெரிந்து கொள்ள அருமையானதொரு வாய்ப்பு! So - get cracking!

லயன் Top 10 ஸ்பெஷல் 416 பக்கம் ரூ. 25/- விலையில் மே 1ம் தேதி கடைகளில் கிடைக்கும். பதிவுத் தபால் மூலம் பிரதிகளைப் பெற விரும்பும் வாசகர்கள் 106ம் பக்கத்திலுள்ள கூப்பனைப் பூர்த்தி செய்து ரூ. 27/- மணி ஆர்டர் செய்யுங்கள்! பதிவுத் தபாலில் தவிர சாதா தபால் மூலம் கண்டிப்பாக அனுப்ப இயலாது!

"பிரின்ஸ் in ஆப்பிரிக்கா" இதழின் உள்ளட்டையில் இரத்தப் படலம் போல புதியதொரு உருக்கமான கதைத்தொடர் நமது லயனில் ஆரம்பிக்க இருப்பதாக எழுதியிருந்தேன்! அதைப் பற்றி நிறைய வாசகர்கள் கேட்டிருந்தனர்! முன்னாள் யூகோஸ்லேவியா நாட்டில் கடந்த சில ஆண்டுகளாகவே கோரமான உள்நாட்டு யுத்தம் நடந்து வருவது உங்களுக்குத் தெரியுமென்று நினைக்கிறேன்! செர்பியா - போஸ்னியா - க்ரோவேஷியா என்று பல்வேறு தனி ராஜ்யங்களாக சிதறிப் போயுள்ள அந்தப் பகுதியில் யுத்தமும், இரத்தமும் கோர தாண்டவம் ஆடி வருகின்றன! பல்லாயிரக்கணக்கான அப்பாவி மக்கள் நாள்தோறும் மொத்த மொத்தமாய் எமலோகம் அனுப்பப் படுகின்றனர்! இந்த மரண மண்டலத்திலுள் நமது காமிக்ஸில் ஓவியம் வரையும் ஆர்ட்டிஸ்ட் ஒருவர் சிக்கியுள்ளார். ஹெர்லெக் ஷோம்ஸ் மற்றும் பல கதைகளை உருவாக்கிய இந்த நண்பர் - சாரயெவோ என்ற நகர நரகத்திலிருந்து வெளியேற முடியாமல் தவிக்கிறார். பயங்கரமான இக்கட்டிலிருக்கும் போது கூட ஓய்ந்து கிடக்காமல் - தன்னைச் சுற்றி நடக்கும் கொடூரத்தை ஒரு நிஜக்கதைத் தொடராக வரைந்து - சித்திரங்களை Fax மூலம் அனுப்புகிறார்! யுத்தமும் - இரத்தமும் என்ற தலைப்பில் இவரது உருக்கமான கதை வெகு விரைவில் நமது லயனில் வரயிருக்கிறது!

லயன் Top 10 ஸ்பெஷல் மிக சிறப்பாக, சரியான சமயத்தில் விற்பனைக்கு வந்திட வேண்டுமென்பதால் முழு வேகத்தில் பணிகள் நடந்து வருகின்றன... அதைப் பற்றி அடுத்த மாதம் எழுதுகிறேன்! இப்போதைக்கு நீ..ண்மான (ஹாவ்!) இந்த ஹாட்-லைனை முடித்துக் கொள்கிறேன்!

happy reading!




அன்புடன்,

ஆசிரியர்.

பக்கத்தைப் புரட்டு முன்
தம் பிடித்துக் கொள்ளுங்கள்...

ஒரு படக்கதைப் புதையலுக்கான
வரைபடம் தொடரும் பக்கங்களில்
காத்துள்ளது...

லயன் காமிக்ஸ்

மே மாதம் வரவிருக்கும்

## லயன் TOP 10 ஸ்பெஷல்

இதழுக்கான முன்னோட்டத்தைப் பார்க்கப் போகிறீர்கள்

விளம்பரப்படுத்தப்பட்டுள்ள 16 கதைகளிலிருந்து
10 Top கதைகள் மட்டும்
சிறப்பு வெளியீட்டில் இடம் பெறும்!

எந்த 10 கதைகள் என்பதை
யூகித்து எழுதி அனுப்புங்கள்!
எங்கள் செலக்ஷனை சரியாக யூகிப்போருக்கு
பரிசு உண்டு!


பாலைவனப் பரலோகம்!
டெக்ஸ் வில்லர் சாகஸம்!
காமெடி கௌபாய் லக்கி லூக் தோன்றும்
முழு நீள முழு வண்ண கார்ட்டூன்
"மேடையில் ஒரு மன்மதன்!"
லயன் காமிக்ஸ்
புதிய ஆக்ஷன் ஹீரோ!
மின்னல் மனிதன்!
மாடஸ்டி & கார்வின் தோன்றும்
மரண ஒப்பந்தம்!


காரிகன் சாகஸம்
மனைவி = மரணம்!
சூப்பர் ரிப்போர்ட்டர் ஜானி 'நறுக்' சாகஸம்
மரண மனை!
லயன் காமிக்ஸ்
வன அதிகாரி பீட்டர் பாலன்டைன் தோன்றும்
கானக நண்பன்!
மினி சாகஸம்!
எதிரிக்கு எதிரி = எதிரி!
ஸ்பைடர் சாகஸம்


XIII
இரத்தப்
படலம் - VI
ஒரு
தவளையைத் தேடி!
மிஸ்டர்
ஜெட்
சாகஸம்!
லயன்
காமிக்ஸ்
நியூயார்க்கில்
பார்னே!
பெருச்சாளிப்
பட்டாளத்தின்
பனிமலைப்
படலம்!


உங்கள் இரும்பு நண்பனின் சாகஸம்!
ஆர்ட்டிக்கில் ஆர்ச்சி!
கம்ப்யூட்டர் கொலைகள்!
லயன் காமிக்ஸ்
மின்னல் படை சாகஸம்
புரட்சிக்கொரு பயிற்சி!
மீட்போர் ஸ்தாபனத்தின்
பெர்முடா படலம்!


காலத்தினுள் பயணம் செல்லும் அதிசய எந்திரத்தின் மூலம் 18ம் நூற்றாண்டைப் பார்த்தபின், தாம்சனும் விக்டரும் தங்கள் விந்தை ரோபோ ஆர்ச்சியுடன் நிகழ்காலத்திற்குத் திரும்பிக் கொண்டிருந்தனர். "கோட்டை" என்று அழைக்கப்படும் அந்த எந்திரத்தை இயக்குவது ஆர்ச்சிக்கு மட்டுமே தெரிந்த - கலை!
20ம் நூற்றாண்டிற்கு எப்படிப் போவது என்று தெரியுமா ஆர்ச்சி?
ஓ யெஸ் அவனுக்குத் தெரியும் தாம்சன்! நமக்குத் தெரியாததெல்லாம் கூட அவனுக்குத் தெரியும்! அதுதான் பிரச்சனையே! மண்டைக் கனம் பிடித்த இரும்புக் கோமாளி!
5000

# ஆர்ச்சியோடு மோதாதே!


ஆர்ச்சி இப்போது கலத்தை தரையிறக்கப் போகிறது! ...வேறு ஏதாவது கேள்வி உண்டா விக்டர் நண்பா?
வ - வந்து சும்மாதான் உன்னைப் பற்றிக் கிண்டலாகச் சொன்னேன்! கோபித்துக் கொள்ளாதே! எங்களைப் பத்திரமாக கீழே கொண்டு போய் இறக்கு! அது போதும்!


'கோட்டை' கச்சிதமாகத் தரையிறங்கியது...
ஆர்ச்சி பையா, உன்னைத் தவறாக எடை போட்டு விட்டேன் - சரியான இடத்தில்தான் கலத்தை இறக்கியுள்ளாய்! இங்கிலாந்தின் கிராமப்புறக் காற்றை சுவாசிப்பது அபாரமாக உள்ளது!
எல்லாமே அமைதியாகத் தெரிகிறது! எங்கோ விடுமுறையைக் கழிக்க வந்துள்ளது போல் உணர்கிறேன் விக்டர்!


விக்டர் வேலித் தடுப்பை நோக்கி கடந்தான்...
அங்கிருந்து சுற்றுப் பகுதியை பார்வையிடுவோம்...
நோ - வெயிட்! அதைத் தாண்டிப் போக வேண்டாம்!
என்ன? உனக்கு என்னாச்சு?


எட்டிப் பார்த்த விக்டர் வெலவெலத்துப் போனான்!
நான் - ஆவ் - பயங்கரமான பள்ளம்!
நாம் - நாம்... காற்று மண்டலத்தில் ஆயிரக்கணக்கான அடி உயரத்தில் உள்ளோம்!
அடேய் அதிகப் பிரசங்கி இரும்புத் தலையா - இப்போ நாம் எங்கே இருக்கிறோம்? இன்னும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால், நாம் எந்தக் காலகட்டத்தில் இருக்கிறோம்?
ஆர்ச்சிக்கு நிச்சயமாகத் தெரியவில்லை! பல ஆயிரம் வருடங்களைக் கடந்து வந்த பயணத்தில் ஒரு நூறு - இரு நூறு வருஷம் தவறு ஏற்படுவது பெரிசா - என்ன? ஆர்ச்சிக்கும் அடி சறுக்கும்!
கிழிஞ்சது போ!
அப்போது திடீரென்று ஒரு விசில் சப்தம் கேட்டது...
அங்கே பார்!
ஏதோ ஒரு வகை வாகனம் போல் தெரிகிறது - ஆனால் காலியாக உள்ளதே!
கீழே இறங்கத் தயாராகிறது!
அந்த வாகனம் தரையைத் தொட்ட உடன் அதன் முன்பகுதி தானாகத் திறந்து கொண்டது!
ஆர்ச்சி உள்ளுணர்வு உள்ளே போய் ஏறும்படிச் சொல்கிறது..! போய்ப் பார்க்கலாமா?
உன் பேச்சைக் கேட்டால் வம்புதான்! ஆனாலும் வேறு வழி தெரியவில்லை!
கமான்!


இந்த வாகனத்தை யார் அனுப்பியிருந்தாலும் சரி, அவர்கள் நம்மை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர்! அவர்கள் நண்பர்களா - எதிரிகளா என்பதுதான் தெரியவில்லை!
ஒரு ஒளிக் கற்றையின் மீது நாம் போகிறோம்! ரிமோட் கண்ட்ரோல் மூலம் இது இயக்கப் படுகிறது!
விரைவில் வாகனம் தரையிறங்கியது...
அன்னியர்களே வாழ்த்துக்கள்! எங்கள் தலைவர்கள் உங்களுக்காகக் காத்திருக்கிறார்கள்!
விக்டர், சுண்டைக்காய் சைஸ் ரோபோக்கள் அவை!
எவ்வளவு மரியாதையான ரோபோக்கள்! இங்கேயும் ஒன்று இருக்கிறதே!
தானாக மேலே ஏறி இறங்கும் படிக்கட்டுகள்! ஆடம்பரமான இடம்தான்!
பா!
ஆர்ச்சிக்கு கோபம் என்று நினைக்கிறேன் தாம்சன் - சின்னக் குழந்தை போல கைபிடிச் சுவரில் சறுக்கிக் கொண்டு வருகிறான்!


சாப்பாடு வேண்டுமா அன்னியர்களே? உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யக் காத்திருக்கிறோம்!
ARCHIE
ரோபோக்களில் இப்படியும் ரகம் உண்டா? நான் எல்லா ரோபோக்களும் கல்லுளி மங்கன்கள் என்றல்லவா நினைத்திருந்தேன்!
எப்படியோ இரும்புத் தலையன் உருப்படியாக ஒரு காரியம் செய்துள்ளான்!


ரோபோக்களே, என்னை உங்களுடைய தலைவனிடம் கூட்டிப் போங்கள்! ஆர்ச்சி - மனித நண்பர்களை விட எச்சரிக்கையானது! சுலபத்தில் ஏமாறாது!
நிதானம் ஆர்ச்சி - உன் கோபத்தை இந்தச் சின்னப் பயல்களிடம் காட்டி விடாதே!


அவர்களுக்குத் தெரியாமலேயே, அவர்களைச் சிலர் கண்காணித்தனர்..
நம்முடைய விருந்தினர்கள் பதட்டமாக உள்ளனர் - அவர்களுக்கு எல்லாமே விநோதமாகத் தெரிகிறது!
ஹா, ஹா! ஆனால் அவர்களைக் கண்டு நாம் தான் பதட்டமடைந்துள்ளோம்!


நாம் நண்பர்கள் தான் என்று அவர்களிடம் நிரூபிப்போம்! நாம் வாழும் இந்தக் காலமே பகைமையற்ற சூழல் என்பதை உணரச் செய்வோம்!


ஆனால் அவரது கூற்று தவறாகியது!
அமைதிக்கும் சமாதானத்திற்கும் முற்றுப்புள்ளி வைத்திட விண்வெளியிலிருந்து புதிரான பல விண்கலங்கள் வந்து கொண்டிருந்தன!


வினோதமான உருவங்களின் கழுகுப் பார்வைகள் பூமியின் மேல் பட்டன..
நம்முடைய இலக்கே பூமிதான்! அங்குள்ள நோஞ்சான் மக்கள் அமைதியாக வாழ்கின்றனர்! நம்முடைய ஆற்றலுக்கு அவர்கள் இணையாக மாட்டார்கள்!


கமான் ஆர்ச்சி! - இந்த மினி ரோபோக்கள் நம்மை மிதக்கும் காரில் ஏறும்படிக் கூறுகின்றன! அவர்களுடைய தலைவர்களிடம் நம்மை அழைத்துச் செல்லலாம்!
அப்படி என்ன முறைப்பு ஆர்ச்சி கண்ணா? தாம்சனும் நானும் ஒருமுறை கிடைக்கும் இந்த சொகுசைப் பயன்படுத்திக் கொள்ளப் போகிறோம்!


அந்தக் குட்டிக் கார் செயற்கையான சூரியனை கடந்து சென்றது...
இங்கு எப்போதுமே கோடை காலமாக இருப்பதில் ஆச்சரியம் இல்லை! அந்த விளக்குக் கம்பங்களைப் பார்!
பிரிட்டனின் குளிரைவிட இது ரொம்பவே நல்லா இருக்கு! இல்லையா ஆர்ச்சி?
பா!


சில நிமிடங்களுக்குப் பின்னர்...
வெல்கம்! பேச்சுக்களைத் துவக்கும் முன்பு உங்களுக்கு ஏதாவது வேண்டுமா? எதுவானாலும் கேளுங்கள்!
வாவ்! உண்மையிலேயே சிவப்புக் கம்பள வரவேற்புதான் தாம்சன்! ராஜமரியாதை நமக்கு அளிக்கின்றனர்!


தாம்சன், விக்டர் - நாம் "கோட்டைக்கு"த் திரும்பி விடலாம்.- இந்த இடத்தை விட்டுப் போய் விடுவோம்!
இங்கு சாகஸம் செய்ய வாய்ப்பே இல்லை! சாகஸம் இல்லா விட்டாலே போரடிக்கிறது!
என்ன கிண்டலா? இந்த ராஜ உபசாரம் வேறு எங்கே கிடைக்கும்?
விடுமுறையை ஜாலியாகக் கழிப்பது போல இருப்போம்!



ஆர்ச்சியும் மற்றவர்களும் வானைப் பிளந்து கொண்டு நின்ற கட்டிடத்தினுள் இருந்தனர்...
நண்பர்களே, இங்கு நீங்கள் சந்தோஷமாக இருக்கலாம்! பல ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக நாங்கள் எந்தஒரு யுத்தமோ அல்லது வன்முறையோ இல்லாமல் வாழ்ந்து வருகிறோம்!
ரோபோக்களுக்கு... மட்டும் தான் வேலையா?! என்ன அநியாயம் இது?
அதனால் புதியதொரு உலகை எங்களால் நிர்மானிக்க முடிந்தது! இங்கே மனிதனுக்கு வேலையே கிடையாது! ரோபோக்கள் சேவகம் செய்யும்!
ஆனால் திடீரென்று...
அங்கே பாருங்கள் - புது வகையான விண்கலன்கள்! பார்த்தால் பறக்கும் சுறாக்கள் போல் தெரிகிறதே!
தாம்சன் - அவைகளைப் பார்த்தால் நிச்சயமாக நேசக்கரம் நீட்ட வந்திருப்பதாகத் தெரியவில்லை!
ஹ்ம்ம்ம், ஆர்ச்சியும் இதை ஒத்துக் கொள்கிறது!
விரோத மனப்பான்மையுடன் எவரும் இங்கு வந்ததில்லை! அவர்களைப் பின்னர் சந்திக்கலாம்! இப்போது நீங்கள் டீ சாப்பிடலாமே!
ஓ.கே.! ஆர்ச்சி, நீ அங்கேயே பாதுகாவலனாக நில்!


சில மைல்களுக்கு அப்பால் அந்தப் புதிரான விண் கலங்கள் தரையிறங்கின...
திட்டமிட்டபடி இறங்கிவிட்டோம்! அதிரடி நடவடிக்கையில் ஈடுபடுவது போல் பாவ்லா காட்டுங்கள் - பீதியே ஒரு ஆயுதம் தான்!
பூமியும் அதில் உள்ள நோஞ்சான் பயல்களும் விரைவில் நம் பிடியில்!
புதிதாக வந்தவர்களை வரவேற்க மினி ரோபோக்கள் நெருங்கின...
அன்னியர்களே வாழ்த்துக்கள்! எங்களுடைய தலைவர்கள் நீங்கள் யார் என்பதைத் தெரிந்து வரும்படி சொன்னார்கள்!
அவர்களிடம் போய் நாங்கள் தான் க்ருல்ஸ் என்று சொல்லுங்கள்! அதுமட்டுமல்ல - இன்னொரு சேதியும் உள்ளது -
கதிர்களைப் பீய்ச்சியடிக்கும் துப்பாக்கிகள் முழங்கின...
உங்களுக்கு எஜமான்களாகவே நாங்கள் வந்திருக்கிறோம்! உங்களை அடிமைப்படுத்தப் போகிறோம்!
அடிபணியாவிட்டால் நசுக்கி விடுவோம்!
புஷ்ஷ்!
ஸ்புஸ்ஸ்ஸ்!


ஆக்கிரமிப்பாளர்கள் முன்னேறத் துவங்கினர்...
கண்ணுக்குத் தெரியும் எல்லாவற்றையும் அழித்து நாசமாக்குங்கள்! பூமியில் வாழும் நோஞ்சான்களுக்கு நம் வலிமை பற்றித் தெரியட்டும்!
டொமீர்!
பூலோகவாசிகளைக் கைது செய்து நமது அடிமைகளாக்குங்கள்!
ஹா! கோழைப் பயல்கள் - நம்மைத் தடுக்க பலமற்றவர்கள்!
இதற்கிடையில்...
பல மைல்களுக்கு அப்பால் என்ன நடக்கிறது என்பதை இந்த வீடியோத் திரை காட்டும்!
ஆர்ச்சி பையா, நீ எங்களை இங்கு கொண்டு வந்ததும் நல்லதொரு திருப்பம் தான்!
பா! ஆர்ச்சிக்குப் போரடிக்கிறது!


ஆனால் வீடியோத் திரையை இயக்கியபோது -
அட ஆண்டவா - இ - இது போர் அல்லவா? அந்த விண்கலங்கள் ஆக்கிரமிக்க வந்துள்ள படை!
ஆனால் - ஆனால் எங்களுக்கு விரோதிகளே இல்லையே! நாங்கள் யாரையும் பகைத்திடவில்லையே! எனக்கு ஒன்றும் புரியவில்லை!
விர்ரென்ற சப்தத்தைக் கேட்ட ஆர்ச்சி பால்கனிக்கு ஓடி எட்டிப் பார்த்தது...
அங்கே பாருங்கள்! உங்களுக்கு நிறையவே விரோதிகள் உள்ளனர்!
இது அந்த விண்கலங்களில் வந்த காட்டு மிராண்டிகள்!
க்ருல்ஸ்களிடம் சரணடைந்து வரவேற்கத் தயாராகுங்கள்! எங்களை எதிர்ப்பவர்களுக்கு சாவு நிச்சயம்!
ஆர்ச்சி, "கோட்டைக்கு" திரும்பவும் ஓடிப் போய் விடுவோம்! இங்கிருந்து போக வேண்டுமென்று நீ சொன்னது சரியான யோசனை தான்!
விக்டர், இப்போது எடுத்துள்ள முடிவு தவறு - ஆனால் முன்பு சொன்னது சரி! "விடுமுறையைக்" கழிக்க இங்கேயே இருப்பதென ஆர்ச்சி தீர்மானித்து விட்டது! ஆக்கிரமிப்பாளர்கள் வந்துள்ள சமயத்தில், இரக்கமில்லாமல் நண்பர்களை விட்டுப் போகக் கூடாது!
பயல் வசமாக மடக்கி விட்டான் விக்டர்! அவன் சொல்வதும் சரிதான்! இப்போது நாம் ஓடி விடக் கூடாது! இறுதி வரை இருந்து ஒரு கை பார்த்து விடுவோம்!


ஆர்ச்சி ஏதாவது சொல் - சீக்கிரம்! அவர்கள் ஏதாவது செய்து தொலைக்கப் போகிறார்கள்!
இது தான் கடைசி வாய்ப்பு! சரணடைவதாக சிக்னல் கொடுங்கள். எங்களை எஜமானர்களாக ஏற்றுக் கொண்டு வரவேற்கத் தயாராகுங்கள்! பதில் சொல்லுங்கள் - இல்லையேல் உங்களை அழிக்கத் துவங்கி விடுவோம்!


ஆர்ச்சியின் ஒலி பெருக்கி சப்த மெழுப்பியது...
நான் - ரோபோ ஆர்ச்சி பேசுகிறேன் - உங்களை வரவேற்கத் தயாராகிக் கொண்டிருக்கிறோம்!
உங்களுக்கு பரிசளிப்பதற்கான பொருளை நான் தேடிக் கொண்டிருக்கிறேன் வீராதி வீரர்களே!
ஏய்... ஏய்.. ஆர்ச்சி! இப்படியா வெட்கமில்லாமல் அவன்கள் காலில் விழுவது? சரணடைவது என்றாலும் கொஞ்சம் தோரணையாக சரண் அடைவோம்!


ஏய்.. ஏய் அந்த மரத்துடன் என்ன செய்கிறாய்?
யா!
நம்முடைய மரியாதைக்குரிய எஜமானர்களுக்கு ஒரு பரிசு கொடுக்கப் போகிறேன்! பொறுத்திருந்து பாருங்களேன்!


அருகிலிருந்த சிலையைப் பெயர்த்து எடுத்து மரத்தின் மேல் வைத்தது - அதன் பிறகு...
நோ, ஆர்ச்சி, நோ! கவட்டை அடிப்பது போல் செய்யப் போகிறாயா?
டேய்... கோமாளிப் பயலே... இந்தக் கோணங்கித் தனத்தை நிறுத்து!


உஷ்ஷ்!
அவர்களிடம் எதையும் தகர்க்கக் கூடிய கதிர்வீச்சுக் கருவிகள் உள்ளது ஆர்ச்சி! நம் எல்லாரையும் சாம்பலாக்கப் போகிறார்கள்!
முதலாளிகளே.. 'ஒரு கலைப் பொக்கிஷத்தை'ப் பரிசாக அனுப்புகிறேன்!
விர்!
பூலோக வாசிகள் சுத்த சோதா கோஷ்டி! அமைதியுடன் வாழ்வதால் கோழைகளாக உள்ளனர். பரிசளிக்கக் கூட முன் வந்துள்ளனர் என்றால் பாரேன்!
முட்டாள்கள்! அடிமைகளாக இருக்கத்தான் இவர்களெல்லாம் லாயக்கு!
ஆனால்-
சரியான இடத்தில் விழுந்து விட்டது! ஆர்ச்சியும் பின்னாலேயே போக வேண்டியது தான்!
பூம்!
ஆ! ஆ



ஆர்ச்சியின் ஜெட் முழு வேகத்தில் செயல்பட்டது...
ஏற்கனவே பரிசு கிடைத்து விட்டது. இப்போ பரிசு கொடுத்தவனே உங்களிடம் வரப் போகிறான்! யாாாஹூ!
அடேய் ஆர்ச்சி! பைத்தியக்காரத் தனமாக நடந்து கொள்ளாதே! இப்படிச் செய்ததற்கே க்ருல்ஸ் நம்மை அழித்து விடுவார்கள்!
ஆக்கிரமிப்பாளர்கள் அதிர்ச்சியிலிருந்து விடுபடும் முன்பு...
சூறாவளிக் காற்று!
தவறு - இது ஆர்ச்சியின் கைங்கர்யம்! பழைய ரோபோக்கள் சோதாக்களல்ல டோய்!
விக்டர், நம்பயல் அவர்களைப் புரட்டிப் புரட்டி எடுக்கிறான்!
நாமும் கீழே போவோம்! ஒருக்கால் அவன் தோற்றுவிட்டால் இந்தக் காட்டு மிராண்டிகள் நம் எல்லோரையும் அழித்து விடுவர்!


க்ருல்ஸுக்கு கதிர்வீச்சுத் துப்பாக்கி தான் தெரியும்! ஆர்ச்சிக்கு அதிரடி மோதல் எல்லாமே அத்துப்படி!
செம உதை வாங்குகிறார்கள்!
முழங்கால் போட்டு -கைகளை உயரத் தூக்குங்கள்! இனி மிச்சத்தை மினி ரோபோக்கள் கவனித்துக் கொள்ளும்!
உங்களுடைய கதிர்வீச்சுத் துப்பாக்கிகள் இப்போது எங்களிடம் உள்ளது ஜாக்கிரதை!
போரில் நீங்கள் பராக்கிரமசாலி ஆர்ச்சி! எங்களுக்கு நீங்களே தலைமை தாங்குங்கள்!
ஹெ! ஹெ! ஆர்ச்சிக்கு ஐஸ் வைத்தால் பிடிக்காது! இருந்தாலும் ஆர்ச்சி ஏற்றுக் கொள்கிறது! கைதிகளைப் பத்திரமான இடத்தில் போடுங்கள்!
பின்னர் பிரம்மாண்டமான வானளாவிய கோபுரத்தினுள்...
நம்மிடம் ஒரு சில கதிர் வீச்சுத் துப்பாக்கிகள் தான் இருக்கிறது -ஆனால் விரைவில் நான் ஒரு ராணுவத்தையே தயார் செய்து விடுவேன். உங்கள் எல்லாருக்கும் தற்காப்பு பற்றிச் சொல்லித் தருகிறேன்!
விஞ்ஞானத்தை யுத்தத்திற்காகப் பயன்படுத்துவது எப்படி என்பதையே நாங்கள் மறந்து விட்டோம்! அழிவு ஏற்படுத்தும் ஆற்றல் என்பதே மறந்து போய் விட்டது!


நாம் வில்லும் அம்பும் தயாரிப்போம். -எப்படித் தயாரிப்பது என உங்களுக்குச் சொல்லித் தருகிறேன்! அத்துடன் நம் மூளைக்கும் வேலை கொடுக்க வேண்டும்! மனித நண்பர்களை விட சுறுசுறுப்பான எலக்ட்ரானிக் மூளை ஆர்ச்சியிடம் இருக்கு!
அட ஆண்டவா -சட்டித் தலையன் ரொம்பவும் தான் தம்பட்டம் அடிக்கிறான்! ஆனால் அவன் சொல்வதெல்லாம் சரியாகவே இருக்கு!
இதற்கிடையில் விண்வெளியிலிருந்து வந்த ஆக்கிரமிப்பாளர்கள் நகரின் முக்கிய பகுதிகளைத் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தனர்...
வானளாவிய 12வது நிர் கோபுரத்தைத் தாக்கச் சென்ற நமது தோழர்களிடமிருந்து எந்தவொரு தகவலும் இல்லையே!
வீடியோ திரையின் மூலம் மீண்டும் அவர்களுக்கு சிக்னல் கொடு!
மறுகணம் கோபுரம் 12ல்...
க்ருல்ஸ் அதிரடிப்படை 128 அழைக்கிறது! நேரில் தோன்றி அறிக்கை தாருங்கள்!
மாண்புமிகு ஆர்ச்சி அவர்களே - இப்ப என்ன செய்வது? நமது கைதிகள் பதில் அளிக்காவிட்டால் முழு அளவிலான படையுடன் க்ருல்ஸ் இங்கு வந்து விடுவார்கள்!


வீடியோத் திரையில் அங்கு நடப்பதை க்ருல்ஸ் படையினர் கண்டனர்...
படையினரே - எங்கே இருக்கிறீர்கள்? கோபுரம் 12 ஐ கைப்பற்றி விட்டீர்களா?
அங்கே பார் - ஒரு குரங்கு மூஞ்சி ரோபோ பதிலளிக்கிறது!
ARC


மிரண்டு போயிருந்த தோழர்கள் ஆர்ச்சியைத் தடுத்து நிறுத்தும் முன்...
நான் தான் - ஆர்ச்சி -உங்களை எச்சரிக்கிறேன்! உங்களுடைய படை பிடிபட்டுவிட்டது! பூலோகத் தளபதி நான்! உங்கள் பருப்பு என்னிடம் வேகாது!
நோ, ஆர்ச்சி! உனக்குப் புண்ணியமாகப் போகிறது - வாயை மூடு! டன் கணக்கில் ஆயுதங்களுடன் நம்மை நசுக்க வந்து விடுவார்கள்!
வீடியோ திரை மவுனமானது...
குட்! சுப்ரீம் ஸ்டார் ஆர்ச்சி அவர்களை எதிர் நோக்கத் தயார்!
அடேய் - மரமண்டை! காரியத்தைக் கெடுத்து விட்டாயே! அந்தக் கழுகு மூஞ்சித் தலையன்கள் சூறாவளி போல் இங்கு வரப் போகிறார்கள்!



ஆர்ச்சியின் ஒலி பெருக்கிகள் அலறின...
கோபுரத்தைக் காலி செய்யுங்கள் - சீக்கிரம் -சீக்கிரமாக வெளியேறுங்கள்! மியூசியத்தில் உள்ள புராதன ஆயுதங்களை எடுங்கள்! எதைப் பற்றியும் கவலைப்பட வேண்டாம் - ஆர்ச்சி பொறுப்பேற்றுக் கொள்கிறது!
ஆண்டவனே!
பறந்து செல்லும் கார்கள் உடனே செயலில் இறங்கின...
வருவதைச் சந்திப்போம் விக்டர்! -என்ன செய்கிறோம் என்பது ஆர்ச்சிக்குத் தெரியும் என்று நம்புவோம்!
நீ சொல்வதில் தவறு ஏற்பட்டு விட்டால் நாம் சாவது சர்வ நிச்சயம்!
மரங்கள் அடர்ந்த பகுதியில் வந்து இறங்கினர்...
மறைந்து கொள்வதற்கு பதுங்குகுழி தோண்டுவோம்! வானளாவிய கோபுரம் இப்போது க்ருல்ஸ் கைதிகளைத் தவிர காலியாக உள்ளது!
அடுத்த என்ன இரும்புத் தலையா? இப்படிப் பதுங்குவது உன் ஸ்டைல் இல்லையே?!
திடீரென்று ஆர்ச்சி செயற்கை சூரியன் ஒன்றைக் கண்டது...
சூரியன் ஒளி வீசுகிறது -ஆனால் உஷ்ணம் அதிகமாக இல்லையே -ஏன்?
சூரியனின் உஷ்ணத்தை உறிஞ்சும் திரை ஒன்றினை நிர்மாணித்துள்ளோம் கமாண்டர் ஆர்ச்சி! நமக்குத் தேவையான வெப்பத்தை மட்டுமே உள்ளே அனுமதிக்கும்!


அதுபோன்றதொரு எந்திரம் அருகிலேயே இருந்தது...
இதுதான் உஷ்ணத்தைக் கிரகித்துக் கொள்ளும் எந்திரம்!
ஆஹா! இதை நான் எடுத்துக் கொள்கிறேன்! இதே போல மற்ற எந்திரங்களை மினி ரோபோக்கள் கொண்டு வரட்டும்! ஆர்ச்சிக்கு சூப்பரான ஐடியா தோன்றிவிட்டது!
இதற்கிடையில்...
கதிர் வீச்சு துப்பாக்கிகளைத் தயாராக வைத்திருங்கள்!
கோபுரம் 12 நோக்கி உஷாராக முன்னேறுங்கள்! அந்த ஆர்ச்சி ரோபோ அபாயகரமானது! அது தான் பூமியில் வாழும் இந்தப் பயல்களுக்குத் துணிச்சலைத் தருகிறது!
க்ருல்ஸ்களின் கலன்கள் அணி வகுத்துச் சென்ற அதே நேரம் தலைக்கு மேலே...
தற்காப்பு நடவடிக்கை எதையும் காணோம்! முன்னேறிச் செல்ல அபாயம் எதுவுமில்லை!
செய்தி கிடைத்தது! தொடர்ந்து


ஆர்ச்சி, அவர்கள் வருகிறார்கள்!
ஆண்டவனே! எங்காவது பல ஆயிரம் ஆண்டுகளுக்கு அப்பால் இப்போது இருந்தால் நன்றாக இருக்கும்!
ஜிட் - டா - டி ஜிக்கிட்!
ஜா ஜார! ஹூராரே!
ஆர்ச்சி ரோபோக்களின் பாஷையில் பேசுகிறது! ...ஏதோ திட்டம் போட்டிருக்கிறான்!
அதன் பின்னர்...
விக்டர் - போர்க் களத்தில் எப்படி செயல்பட வேண்டும் எனப் பயல் உத்தரவு போடுகிறான்! மினி ரோபோக்கள் அதைப் புரிந்து கொள்கின்றன!
எனக்கும் புரிந்தால் நன்றாக இருக்கும்! பயத்தில் புல்லரிக்கிறது எனக்கு!
ஆர்ச்சி தனது தோஸ்த்களை பறக்கும் தட்டில் ஏறும்படி உத்தரவிட்டது...
ஆர்ச்சி அதிரடிப்படை தயார்! தாம்சனும் விக்டரும் இதில் சேர்ந்துள்ளது அவர்களது அதிர்ஷ்டம்தான்!
என்னது? இதுதான் அதிர்ஷ்டமென்றால் எனக்கு அதிர்ஷ்டமே வேண்டாம்பா சாமி!
அங்கே பார்! இந்தப் பாலம் வரை க்ருல்ஸ் வந்து விட்டனர்!


பறக்கும் தட்டுகள் அப்படியே நின்றன...
பயல் என்ன செய்யப் போகிறான் என்று உனக்குத் தெரியுமா தாம்சன்?
விரைவில் தெரிந்து விடும்!
ஓ நோ! மரங்களை வெட்டி வீழ்த்துகிறான்! இது மோசமான விளைவுகளுக்கு அறிகுறி! அடுத்து என்ன செய்வான் என்று எனக்கு நன்றாகவே தெரியும்!
தொலைந்தது போ!
பின்னால் தள்ளி நில்லுங்கள் - நான் பாலத்தை நொறுக்கப் போகிறேன்! க்ருல்ஸ் அதன் மேல் வரும் வரை நாம் காத்திருப்போம்... அதன் பிறகு - அம்பேல்!
இப்படிச் செய்வதற்கு க்ருல்ஸ் நம்மை சாம்பலாக்காமல் விடமாட்டார்கள்!


விர்ர்ர்!
யாஹ்ஹி
க்ருல்ஸ் படைகள் வந்து கொண்டிருக்கும் பாலத்தின் மீது ஆர்ச்சி குறி வைத்துள்ளான்!
இதற்குப் பதிலடியாக க்ருல்ஸ் என்ன செய்யப் போகிறார்களோ?


இலக்கில் போய் விழுந்து விட்டது! ஆர்ச்சி ஸ்டைலில் சொல்லப் போனால் -முகரையில் கும்மாங் குத்துதான்!
ஓடு தாம்சன் - ஓடு! க்ருல்ஸ்களின் கதிர் வீச்சுத் துப்பாக்கிகளுக்கு நாம் இலக்காகப் போகிறோம்!
டொமீர்!
ஆத்திரமடைந்த க்ருல்ஸ் படைக் கமாண்டர் வேகமாக உத்தரவு பிறப்பித்தான் -
நாசம் விளைவிக்கும் எந்திரங்களை அவர்கள் பக்கம் திருப்புங்கள்!
இதோ கதிர்கள் பாய்ந்து வரப் போகிறது!
ஆனால் அந்த வெப்பக் கதிர்கள் நடுவானிலேயே தடுத்து நிறுத்தப்பட்டன!
ஆர்ச்சியிடம் கேள் -நானும் உன்னைப் போல் தான் பிரமித்துப் போய் உள்ளேன்! -ஏதோ அற்புதம் நடந்தது!
நா - நாம் இன்னும் உயிருடன் இருக்கிறோமா? என்ன நடந்தது? இன்னும் கருகிச் சாகாமல் இருக்கிறோம்?



ந்திரம். கதிர் வீச்சின் அதீத வெப்பத்தைக் கிரகித்துக் கொண்டது தோழர்களே! சூரியனின் உஷ்ணத்தை உறிஞ்ச முடியுமென்றால் கதிர் வீச்சையும் சமாளிக்க முடியணும் தானே?
அவ ல்வதும் சரிதான் லுக்கு இரும்புத் தலையாக இருக்கலாம் - ஆனால் உள்ளே எக்கச்சக்கமான மூளை!
அட்டகாசம்!
அருங்காட்சியகத்திலிருந்து பழைய காலத்து பீரங்கிகளை இந்த மினிரோபோக்கள் தூக்கிக் கொண்டு வருகிறார்களே! இதற்கு இப்போ என்ன அவசியம் ஆர்ச்சி கண்ணா?
ஏதேதோ செய்து எங்களைத் திகைப்பில் ஆழ்த்திக் கொண்டேயிரு!
எதிர் காலத்து பூலோகவாசிகளுக்கு போரைப் பற்றி ஒன்றுமே தெரியாது! எனக்கு
மாகத்
ஒரு
துருப்பிடித்த இரும்பை வைத்துக் கொண்டு விண்வெளிக் கொலைகாரர்களை எதிர்த்துப் போராட முடியும் என நினைக்கிறேன்! ஹம்ம்ம்...


இதற்கிடையில்...
நாசம் விளைவிக்கும் நமது வெப்பக் கதிர்களைத் தடுத்து விட்டனர்! இந்த ரோபோ லேசுப்பட்டதில்லை!
நமது விண்கலங்களைக் கூப்பிடு! எதிரிகளின் நிலைகள் மீது தாக்குதல் நடத்தி அழித்து விடு!
மறுகணம் புதிரான விண்கலங்கள் பாய்ந்து வந்தன ...
இதோ வந்துவிட்டனர்! அதிலிருந்து ஒரு கதிர்வீச்சு ஊடுருவி வந்தால் கூட தொலைந்தோம்!
ஆர்ச்சி மாவீரன்! ஆர்ச்சிக்கு என்ன செய்ய வேண்டும் என்று தெரியும்!
புராதன பீரங்கி ஆர்ச்சியின் கைகளில் கோல்ப் விளையாடும் மட்டையாக மாறியது -
விண்கலங்கள் கண்ணில் தெரியும்படி வந்து விட்டன! இனி பாருங்கள் வேடிக்கையை!
பயல் என்னதான் செய்யப் போகிறான்?
எனக்குப் புரிகிறது என்று நினைக்கிறேன், விக்டர்!


ஹாய்... சிக்லர்! இன்னும்! இன்னும்! கொண்டு வாங்க!
விர்...!
தயாராக இருக்கு கமாண்டர்!
டொமீர்! வரிசையாக விண்கலங்கள் வானில் சிதறிப் போயின!
பூம்!
ஆ!
பூம்!
அதே நேரம் மற்ற மினி ரோபோக்கள் ஆர்ச்சி போட்ட உத்தரவை நிறைவேற்றின...
ஆயுதங்கள் மியூசியத்திலிருந்து வந்திருக்கலாம் - ஆனால் ரொம்ப நல்லாவே வேலை செய்யுது!
டடடட்ட்டட்டடக்
ஆர்ச்சி சொன்னபடி "பெரிய தாக்குதலை" நடத்துவோம்!


நம்ப முடியாத ஒன்று! துருப்பிடித்த ஆயுதங்களை வைத்துக் கொண்டு விண்வெளியுகப் படையை அடித்து விரட்டுகின்றனர்! இது எப்படி சாத்தியம்?
காரணம் உண்டு! க்ருல்ஸ் ரொம்பவும் முன்னேறி விட்டதால் அவர்கள் புராதன ஆயுதங்களைப் பற்றி கற்பனை பண்ணிக் கூடப் பார்க்க முடியவில்லை!
நாமும் கதிர் வீச்சு துப்பாக்கியால் பதிலடி கொடுத்தால் சமாளிக்க அவர்களுக்கு வழி தெரியும் - ஆனால் பீரங்கிக் குண்டுகள் அவர்களைத் திணறடிக்கின்றன!
புறமுதுகு காட்டி ஓடத் துவங்கி விட்டனர்!
பின் வாங்குங்கள்! மறைந்து நின்று அணி அணியாகச் சேர்ந்து தாக்குங்கள்! எல்லாப் படையினருக்கும் தகவல் கொடுங்கள்!
நானும் அப்படித்தான் நினைக்கிறேன்!
புறமுதுகு காட்டி ஓடிய படைகளை நெருப்பு அம்புகள் விரட்டின...
நாம் ஜெயித்து விட்டோம் ஆர்ச்சி! நீ - நீ... பயங்கரமான கில்லாடி தான்...! என்ன தலைக்கனம் கொஞ்சம் ஜாஸ்தி!
வாயை மூடு விக்டர்! வேடிக்கைப் பேச்சிற்கு இது நேரமல்ல! அவர்கள் நிச்சயம் திரும்பி வருவார்கள்!
தாம்சனின் கணிப்பு சரியானது!
உச்சகட்ட நடவடிக்கையாக நமது "மரண உருளை" ஆயுதத்தை வெளியே ஏவுங்கள்!
எதிர்ப்போரை நிச்சயம் நசுக்கி விடும்


ஆர்ச்சி தன்னிடமிருந்த கடைசி பீரங்கிக் குண்டையும் அடித்துப் பறக்க வைத்தது..
சுடுவதை நிறுத்துங்கள்! தோட்டாக்கள் விஷயத்தில் நாம் ரொம்ப சிக்கனமாக இருக்க வேண்டும் மினி ரோபோக்களே!
டொம்!
சொன்னபடியே செய்து காட்டிவிட்டாய் ஆர்ச்சி! விண்வெளிக் கொள்ளை வெறியர்கள் ஏதோ புதுவகை ரகசிய ஆயுதத்தை நீ உபயோகித்தாய் என்று நினைத்து ஓடிவிட்டான்கள்!


அதற்குள் சந்தோஷப்பட்டு விடாதே, விக்டர் -அவர்கள் நிச்சயம் திரும்பி வருவார்கள் என்று ஆர்ச்சிக்கே தெரிந்துள்ளது! இன்னொரு மோதலை எதிர்பார்த்துள்ளான்!
மேடான் பகுதிக்குச் செல்லுங்கள்! பதுங்கி நில்லுங்கள்!


'கமாண்டர்' ஆர்ச்சியின் பயிற்சி தொடர்ந்தது -
பதுங்கு குழிகளைத் தோண்டி அதனுள் இருந்து கொண்டு யார் கண்ணிலும் படாமல் இருங்கள். க்ருல்ஸ் திரும்பி வருகிறார்களா என்பதை நான் கவனிக்கிறேன்!
ஆர்ச்சியின் கண்களில் புராதன "தோட்டா மாலை" ஒன்று பட்டது! அதை எடுத்துப் போட்டுக் கொண்டது!
தாம்சனும் விக்டரும் இங்கே வாங்க! அடுத்த கட்ட நடவடிக்கை என்னவென்று முடிவு செய்வோம்! ஆர்ச்சியின் தலைமையில் ஆலோசனை!
இங்கே பாரேன் - இந்த சட்டித் தலையன் மிலிட்டரி கமாண்டர்களைப் போல கைகளிலும் வரிகள் வரைந்து கொண்டுள்ளான்.
குடைக் காளான் போன்று இருந்த கோபுரத்தின் அடியில் நின்று கொண்டு நண்பர்கள் கண்காணித்தபடி இருந்தனர்.
நாம் இங்கேயே காத்திருப்போம்! என் மனதில் பெரிய திட்டம் ஒன்று இருக்கு!
அது என்னவென்று கேட்பது நல்ல தல்ல தாம்சன்!
அங்கே பார் - ஏதோ நகர்கிறது!
வெகுதூரத்தில்...
'மரண உருளையை' கடைசி கட்ட ஆயுதமாக ஏவுங்கள்! இதிலிருந்து வெளிவரும் கதிர்வீச்சு சர்வ நாசம் நிகழ்த்தும்! அதற்கும் தப்பும் பொருட்களை 'உருளை' நசுக்கித் தள்ளிவிடும்!
"உருளை" முன்னேறட்டும்!


அந்த அற்புத ஆயுதம் உருளத்துவங்கியது..
செத்தோம்!
ஓடு... ஓடு! இந்த அழிவிலிருந்து எதுவுமே தப்ப முடியாது!
எதிர் கொண்ட அத்தனையும் நகக்கப்பட்டது!
கொல்லு! கொல்லு! நமக்குக் கீழ்ப்படிய மறுத்த முட்டாள்களுக்கு சரியான பாடம் கற்பிப்போம்!
டமார்
தாம்சனும் விக்டரும் பீதியின் பிடியிலிருந்தனர்!
அட ஆண்டவனே!.. இது - இது எல்லாவற்றையும் மண்ணோடு மண்ணாக்குகிறதே!
ஆர்ச்சி! உன்னால் கூட இந்த உருளையைத் தடுத்து நிறுத்த முடியாது!


ஆர்ச்சி சளைக்கவில்லை! தனக்குப் பின்னாலிருந்த குடைக்காளான் போன்ற நீர்த்தேக்கத் தொட்டி கோபுரத்தை அடியோடு கீழே சாய்த்தது! - அதன் பிறகு...!
தண்ணீர் தொட்டிக் கோபுரத்தைத் தள்ளி விடுகிறானே!
தாம்சன் ஓடிவிடு!
பயங்கர சப்தத்துடன் அந்தக் கோபுரம் கீழே சாய்ந்தது!
அல்வளவுதான் - கதை முடிந்தது!
அது உருண்டு போவதைப் பார்! லட்சக்கணக்கான கேலன் தண்ணீர் வெள்ளமாய் ஓடுகிறது!
வாவ்! நயாகரா நீர்வீழ்ச்சி போல் தண்ணீரைக் கொட்டுகிறது!
இதைச் சமாளிக்க உருளைக்கு வாய்ப்பே கிடைக்கவில்லை.:
இது என்ன வெள்ளம்?
அவசரம்! அவசரம்
தூள்!



தண்ணீர் அந்த உருளையை மூழ்கடித்த. மறுகணம் உள்ளே மின் கசிவு ஏற்பட்டது..
உருளை வெடித்து விட்டது! பிரமாண்டமான வாண வேடிக்கைதான்!
டொமீர்
ஆர்ச்சியின் மரண அடி படு அட்டகாசம்!
க்ருல்ல் கமாண்டர் அழிவை வீடியோ திரையில் கண்டான்.
அந்த மோசமான எதிரி ரோபோ தான் இத்தனை அழிவுக்கும் காரணம்!
அவன் தலையில் இடி விழ!
வீரர்களுக்கு ஆர்ச்சியின் உத்தரவு! தரை; கடல் மற்றும் விமானங்கள் மூலம் எதிரிகளைத் தாக்குங்கள்! ஆர்ச்சியின் சூப்பர் பிளான் ஆரம்பமாகப் போகிறது!
அங்கே - ஆர்ச்சியின் உத்தரவுக்காக மினி ரோபோக்கள் காத்திருந்தன...
ஆயுதம் தாங்கிய வீரர்களுடன் பறக்கும் தட்டுகளும் தயார்!
கமாண்டர் ஆர்ச்சி அவர்களே - அடுத்த நடவடிக்கை என்ன?


ஆக்கிரமிப் பாளர்களுக்கு எதிராகப் பயல் யுத்தத்தைத் தொடங்கப் போகிறான்!
பயல் சாமான்யப் பட்டவனல்ல! மியூசியங்களில் இருந்த அத்தனை ஆயுதங்களையும் எடுத்துக் கொண்டு விட்டான்!


தாக்குதல் நடத்த எல்லாரும் தயாராக இருந்தனர்...
உத்தரவுக்காகக் காத்திருக்கிறோம் கமாண்டர் ஆர்ச்சி!
க்ருல்ஸ்களை நாம் கடுமையாகத் தாக்குவோம்! அந்தப் பயல்கள் மீண்டும் அணி சேர்வதற்குள் தாக்குதலை நடத்துவோம்!


கதிர் வீச்சுக்கலை கிரகிக்கும் எந்திரங்களும் பறக்கும் தட்டுகளில் ஏற்றப்பட்டன..
தாம்சன், விக்டர்.. ஓடி வாங்க! கமாண்டர் ஆர்ச்சிக்கு உதவியாளர்களாகும் பெருமை உங்களுக்குக் கிட்டியுள்ளது!
அப்பனே இப்போதைக்கு நீதான் பாஸ்!
போகிற போக்கைப் பார்த்தால் பயலை 'சார்' என்று மரியாதையாக கூப்பிட வேண்டியிருக்குமோ என்னவோ?


மறுகணம் -
எல்லாப் படையினரும் - முன்னேறுங்கள்! வெற்றி நமதே!
இப்படியாகி விடக்கூடாதே என்பதற்காகத் தான் நான் கவலைப் பட்டேன் விக்டர்!


அதே நேரம் தரையில் -
அதிபராக்கிரமசாலி ஆர்ச்சி நமக்குத் தலைமை தாங்குகிறார்!
வீரமே ஆர்ச்சிதான் சுப்ரீம் ரோபோ!
க்ருல்ஸ் ஆக்கிரமிப்பாளர்களைத் தூக்கி எறிவோம்!


க்ருல்ஸ் இன்னும் சிதறிய நிலையில் இருந்தனர்..
வீரர்களே - அணி சேருங்கள்! கதிர்வீச்சுத் துப்பாக்கிகளைத் தயார் படுத்துங்கள்!
பூமி முழுவதையும் நாசமாக்குவோம்!


அதற்குள் -
அங்கே பார்! - ஜாக்கிரதை! எதிரி ரோபோ தாக்குகிறது!
தாக்குதல் நடத்த பறக்கும் தட்டுகளை கீழே இறக்குங்கள்! எதிரிகளைக் கண்ட உடன் குண்டு வீசுங்கள்!


ஆர்ச்சியின் கைவண்ணத்தைப் பாருங்கள்!
குண்டுகளை எடுத்து அவனே வீசுகிறான்! எதையுமே பயல் வித்தியாசமான பாணியில் தான் செய்வான்!
ஆர்ச்சி குறி தவற விட்டு விடாதே!
ஆர்ச்சி குறி வைச்சா ராங்கா போனதில்லை!
டொமீர்!
டொமீர்!
தரைப்படைகள் சுடத்துவங்கின..
டுமீல்
முன்னேறுங்கள்! முன்னேறுங்கள்!
கமாண்டர் ஆர்ச்சி எதிரிகளை முழுவதுமாக சிதறடித்து விட்டார்!
டுமீல்! டுமீல்!


ஆக்கிரமிப்பைக் கைவிடுங்கள்! உடனடியாக விண்கலங்களுக்குத் திரும்புங்கள்! அவசரம்! அவசரம்!
இரும்பு மனிதா - நீ சாதித்து விட்டாய்! கழுகு மூஞ்சிப் பயல்கள் விண்கலங்களை நோக்கி ஓடுகிறார்கள்! இங்கிருந்து பறந்து விடப் போகிறார்கள்!
கமாண்டர் ஆர்ச்சி உத்தரவிடுகிறேன் - சுடுவதை நிறுத்துங்கள்!
தோல்வியைத் தொடர்ந்து க்ருல்ஸ் நோக்கிப் பறந்தனர்...
பயல்கள் வாலைச் சுருட்டிக் கொண்டு ஓடுகின்றனர்! நாம் வெற்றி பெற்று விட்டோம்!
ஆர்ச்சி வெற்றி பெற்று விட்டது என்று சொல் நண்பனே! அவனில்லாவிட்டால் நம் கதி அதோ கதிதான்!


எதிரிகள் ஓட்டமெடுத்த உடன் பூலோக வாசிகள் மகிழ்ச்சியுடன் கூடினர்.
கமாண்டர் நம்மைக் காப்பாற்றி விட்டார்! அவருடைய நிபுணத்துவம் தான் பூமியைக் காப்பாற்றி விட்டது!
அதற்குள் மார்தட்டி விடாதீர்கள்! இன்னும் பூமிக்கு முழுப் பாதுகாப்பு இல்லை!
எ - என்ன சொல்கிறாய் ஆர்ச்சி? பாதுகாப்பு இல்லையா? ஆ - ஆனால் அவர்கள் தான் பயந்து ஓடிவிட்டனரே?
ஆர்ச்சி எதையும் காரணமில்லாமல் பேசமாட்டான்?
க்ருல்ஸ் வலிமை மிக்கவர்கள்! நம்முடைய புராதன ஆயுதங்கள் அவர்களைத் தற்காலிகமாகத் தான் ஸ்தம்பிக்கச் செய்துள்ளது!
இதற்கிடையில் க்ருல்ஸின் கல ங்கள் விண்வெளியில் நின்றிருந்ததொரு அசுர செயற்கைக் கோளை நெருங்கின!
க்ருல்ஸ் காலிங்! நாம் மறந்து விட்ட ஆதிகாலத்துப் போர் முறையால் நமது படைகள் தோற்று விட்டன! உங்களுடைய உத்தரவு என்ன?
செயற்கைக் கோளினுள் ஒரு கம்ப்யூட்டர் "மூளை" உத்தரவு பிறப்பித்தது.
பூலோகவாசிகளை நசுக்க வேண்டும்! நம்முடைய ராட்சஸ மலைப் பாம்பு ஆயுதத்தைத் தயார் செய்து அனுப்புங்கள்!


போரினால் சேதமடைந்த சில கட்டிடங்களை ஆர்ச்சி ரிப்பேர் செய்யத் துவங்கியது...
க்ருல்ஸ்களின் உடைந்த ஆயுங்களை ஆர்ச்சி இழுத்துச் செல்கிறது தாம்சன்!
அவற்றை ஓட்டை உடைசல்களில் கொண்டு போய் போடு ஆர்ச்சி! நிறைய பேரீச்சம்பழம் கிடைக்கும்! ஹா! ஹா!
சீக்கிரம் - க்ருல்ஸ் மீண்டும் வருவார்கள்! பூமியை சும்மா விட்டு வைக்க மாட்டார்கள்!
ஹ்ம்ம்.. தலைவலி இன்னும் தீரலைதான்!
அதன் பின்னர்...
மினி ரோபோக்களே, தொடர்ந்து செயல்படுங்கள் -க்ருல்ஸ்களின் வெப்பக் கதிர்களைத் தடுத்து நிறுத்தும் எந்திரங்களைத் தயாராக வையுங்கள்!
அடுத்த என்ன பிரதர்? தாக்குதலை எப்போது எதிர்பார்க்கிறாய்?





தொடர்ச்சி 57-ம் பக்கத்தில்


விற்பனையாகிறது!
C.I.D. மார்ஷல் தோன்றும்
பூமிக்கொரு ப்ளாக்-மெயில்!
ரூ.
5/ -
மாண்ட்ரேக்
தோன்றும்
பாதாளப் பாசறை
விரைவில்
வருகிறது
விலை ரூ. 4/ -




வாசக நண்பர்களே,

நமது லயனின் வளர்ச்சிக்கு அவ்வப்போது உங்களின் Opinionகள் அவசியப் படுகின்றன! கேள்விகளுக்குப் பதில் எழுதி அனுப்பங்களேன். இதற்கு தனிப்பட்ட பரிசுகள் ஏதும் கிடையாது தான் - ஆனால் இதழின் improvementக்கு நீங்களும் உதவினீர்கள் என்ற credit நிச்சயம் உண்டு!

- ஆசிரியர்

1) *தற்சமயம் புக் சைஸ் எப்படி?*

| பிரமாதம்! | பரவாயில்லை | பாக்கெட் சைஸே போதும் |
|---|---|---|
| ☐ | ☐ | ☐ |

2) *1995-ல் வரவிருக்கும் பல கதைகள்* அளவில் மிகப் பெரியவை. படத்தின் அளவையோ - கதையின் நீளத்தையோ குறைக்காமல் வழக்கம் போல் போடுவதென்றால் - இதழ்களின் விலை ரூ. 5/- அல்லது ரூ. 6/- என்று இருக்கும். இதுபற்றி உங்கள் கருத்து?

- [6] விலை கூடினால் பரவாயில்லை
- [2] சைஸை குறைத்து விலையையும் குறையுங்கள்.
- [3] வேறு யோசனை : -

3) 1994ல் நமது லயனின் Best Story எது? :

4) மிகவும் மோசமான கதை? :

5) 1994ன் மிக் அழகான அட்டைப்படம்? :

6) சொதப்பலான அட்டைப்படம்? :

7) தற்சமயம் நமது லயனில் உள்ள சுவையான பகுதிகள் என்னென்ன?

1)
2)
3)

8) புதிதாக என்ன செய்யலாம்?

- [4] பேனா நண்பர்கள் பகுதி
- [5] கார்ட்டூன்கள்
- [6] தொடர்கதைகள்
- [7] பொது அறிவு சமாச்சாரம்
- [8]

9) வரவிருக்கும் நமது "லயனின் Top 10 ஸ்பெஷலில்" இடம் பெற வேண்டுமென நீங்கள் விரும்பும் கதைகள்?

1)
2)
3)
4)
5)
6)
7)
8)
9)
10)

10) மொத்தத்தில் 1994ல் நமது லயனின் Performance பற்றி..?

- ☐ வெரி குட்
- ☐ பரவாயில்லை
- ☐ இன்னும் நிறைய Improvement தேவை!

# புக் மார்கெட்

## தேவை

கொலைப்படை
அதிரடி ஆர்ச்சி
யார் அந்த மினி ஸ்பைடர்
கோடை மலர் '86
சைத்தன் விஞ்ஞானி

## விற்பனைக்கு

நாணய போராட்டம்
இராஜா - இராணி - ஜாக்கி
கோபிரா தீவில் ஸ்பைடர்
சம்மர் ஸ்பெஷல்
விண்டர் ஸ்பெஷல்

முகவரி :

G. ஆனந்த்
மாரியம்மன் கோயில் தெரு,
தாசநாயக்கன்பட்டி (PO)
சேலம் (Dt)
Pin - 636 201.

## தேவை

லயன் :
கத்தி முனையில் மாடஸ்டி
லயன் சூப்பர் ஸ்பெஷல் - 87
கானகத்தில் ஒரு கைதி

திகில் :
அப்பல்லோ படலம்
தவளை மனிதனின் முத்திரை
மரணப் பட்டியல்

மினி லயன் : இரத்த வெறி, பிசாசப்பண்ணை

## விற்பனைக்கு

அதிரடி மன்னன்
ஸ்பைடர் படை
பயங்கர பயணம்
அதிசயத் தீவில் ஆர்ச்சி
டிக்கான் நகரம்

முகவரி :
M. ஜோசப்,
S/o. ப. முத்துசாமி,
மளிகை கடை எதிரில்,
15, வேலம்பாளையம் (PO)
திருப்பூர் - 641 652


ஆர்ச்சி தன் பிரத்யேகப் "பறக்கும் தட்டில்" ஏறி வானில் பறந்தது..!
வானில் இருந்தபடியே தற்காப்பு ஏற்பாடுகளை நாம் கண்காணிப்போம்! தவறு எதுவும் நேர்ந்து விடக் கூடாது..!
தாம்சன் - க்ருல்ஸ் என்ன திட்டமிட்டிருப்பார்கள் என்று நினைத்துப் பார்க்கவே பயமாக உள்ளது!
அதே நேரம் விண்வெளியிலிருந்த பிரம்மாண்ட விண்கலத்தில் -
இரும்பு மலைப்பாம்பை இப்போது ஏவுங்கள்! பூமியில் வாழ்பவர்களுக்கு மரண அடி கொடுக்க இதுதான் நேரம்!
ஜூம்!
தொடர்ந்து ஏவுங்கள்! பாம்பின் பிறபாகங்களும் தொடர்ந்து செல்லட்டும்!


பூமியில் கண்காணிப்பு நிலையத்தில்...
உஷார்! உஷார்! கமாண்டர் ஆர்ச்சியைக் கூப்பிடுங்கள்!
எதிரிகளின் கலங்கள் விண்ணில் நடமாடுகின்றன!
ஆர்ச்சிக்கு எச்சரிக்கை செய்தி கிடைத்த உடன்...
ஹேய், தலைகீழாகப் பாய்கிறாயே இரும்பு மனிதா - உனக்கு என்னாச்சு?
க்ருல்ஸ் வந்து கொண்டிருக் கின்றனர்!
என்ன?
அங்கே - மேலே பாருங்கள்!
என்ன அது? இரும்புக் குழாய்கள் பறந்து வருவது போல் தெரிகிறதே!



ஆர்ச்சி துப்பதியப் போகிறது! ஃபாலோ மீ!
நாமும் பின்னால் போகணுமா? எனக்கென்னமோ பேசாமல் போய், ஒளிந்து கொள்ளலாம் எனத் தோன்றுகிறது!
விநோதமான இரும்புக் குழாய்கள் பூமியில் இறங்கிய உடன்..
ஆண்டவனே - அ - அவை - அவைகள் எல்லாம் ஒன்றாக இணைகின்றன!
ரப்பர் பைப் போல் உள்ளதே!
அப்போது -
ரகசிய ஆயுதத்தின் கடைசிப் பகுதியும் ஒன்று சேர்ந்து கொண்டு விட்டது! அதன் அருகில் போக வேண்டாம்! இதன் நோக்கம் இப்போது புரிகிறதா?
கோபுரம் போல தானுகை அடுக்கடுக்காய் உட்காருகின்றன!
இது ஏதோ பைத்தியக்காரத் தனமான ஆயுதம் ஆர்ச்சி!
வாவ்! இது என்ன பயங்கரம்!


இது - இது பிரம்மாண்டமான இயந்திரப் பாம்பு! செத்தோம் நாம்!
விண்வெளியிலிருந்து கொண்டு க்ருல்ஸ் இதை இயங்கச் செய்கிறார்களே! பூமியை ஆக்கிரமிக்க அவர்களுடைய துருப்புச்சீட்டு இதுதான்!


இப்ப நாம் என்ன செய்வது ஆர்ச்சி? ஏதாவது சிந்தித்துச் சொல்!
ஆர்ச்சியைப் பார் - ஒளிந்து கொள்ள ஓடுகிறான்! சீக்கிரம் குதித்து ஓடு தாம்சன்.. நம்மைப் போலவே அவனும் பயந்து விட்டான்!


மின்னல் போல ஓடிய ஆர்ச்சி..
நான் ஒரு ஆயுதத்தைத் தயாரிக்கிறேன் - நண்பர்களே!
கிண்டலா? மரத்தை வெட்டிச் சாய்ப்பதால் நமக்கு என்ன பிரயோஜனம்?
வாயை மூடு விக்டர்! இதைவிட வேறு நல்ல யோசனை உன்னிடம் இருந்தால் மட்டும் சொல்லு!


ஆர்ச்சி தனது பலம் அத்தனையையும் திரட்டி மரத்தை ஓங்கி வீசி எறிந்தது...
வீ...வ்வ்வ்ஷ்!
அவ்வளவுதான் - தூக்கி எறி ஆர்ச்சி வீசி எறி!
மலைப் பாம்பு நம்மை நோக்கி வருகிறது! - அங்கே பார்!


ஆனல் ஆர்ச்சியின் ஆயுதம் பலனில்லாமல் போனது..
இடிபோல் போய் விழுந்தது! ஆனால் அந்த உலோகத் தகடுகளில் லேசான கீறல் கூட விழவில்லையே!
ஓடுங்கள்! நாம் ஆபத்திலிருக்கிறோம் என என்னுடைய எலெக்டிரானிக் மூளை சொல்கிறது!
பட்!
க்ருல்ஸ் கட்டுப்பாட்டு அறையிலிருந்து உலோகப் பாம்பை இயக்கினர்.
பூலோக முட்டாள்களுக்குப் பயம் பிடித்துவிட்டது! அந்த விநோத ரோபோவும் ஓட்டம் பிடிக்கிறது!
அவர்களை உயிருடன் பிடிக்கத் தயாராகு! பூமியின் தற்காப்பு யுத்தத்திற்கு இவர்கள்தான் தலைவர்கள்!
க்ருல்ஸ்களின் இயந்திரப் பாம்பு மரத்தை வேருடன் பிடுங்கியது..
ஓ நோ! மரத்தையே வேருடன் பிடுங்கும் இதன் முன் நாமெல்லாம் வெறும் புல் பூண்டு தான்!
ஆர்ச்சி எங்களைக் காப்பாற்று! இந்த சைத்தானுக்கு எதிராக நாங்கள் உயிர் பிழைக்க வாய்ப்பே இல்லை!


மறுகணம் -
எலெக்ட்ரானிக் ஐடியா! புகை மண்டலத்தை ஏற்படுத்தி விட்டேன்!
பூலோகத்தில் இருப்பவர்கள் நாசமாய் போகட்டும்! நம்மால் அவர்களைப் பார்க்க முடியவில்லையே!
நீ ஏதாவது தப்புத் தண்டா செய்து விட்டால் நாம் எல்லாரும் தொலைந்தோம்!
எந்திரப் பாம்பின் வாயிலிருந்து ஒரு பெரிய வலை வெளியே வந்தது. ஆனால்...
இந்தப் பிசாசு நம்மைப் பிடிக்க வலை வீசி முயற்சி செய்கிறது!
அவர்கள் நம்மை உயிருடன் பிடிக்க விரும்புகிறார்கள்!
வலையைப் பின் வாங்கு! புகையை விரட்ட காற்றை ஊதித் தள்ளு...
அதன் பிறகு அவர்களைக் குறி வைக்கலாம்!
ஆர்ச்சியின் ஜெட் எந்திரங்கள் புகையைக் கக்கியபடி முழங்கின..
முழு வேகத்துடன் பற, ஆர்ச்சி! சீக்கிரம்!
நொடிப் பொழுதில் பறக்கும் தட்டிற்குத் திரும்பிப் போகிறோம்!
எந்த நிமிஷத்திலும் புகை மண்டலம் முழுவதுமாக விலகி விடலாம்!


இதற்கிடையில் கோபுரத்தின் உச்சியில் இருந்த மினி ரோபோக்கள் செயலில் இறங்கின..!
கமாண்டர் ஆர்ச்சி ஆபத்தில் இருக்கிறார்! இரும்பு மலைப் பாம்பை சுட்டு வீழ்த்துங்கள்!
ஆனால் பீரங்கிக் குண்டுகள் பாம்பிற்கு எந்ததொரு பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை!
சீக்கிரம் வண்டியைக் கிளப்புடா ஆர்ச்சி! உன்னுடைய குட்டி தோஸ்த்துகள் நம்மைக் காப்பாற்ற முயற்சி செய்கிறார்கள்!
ஆனால் பாம்பு நிற்கக் காணோமே! குண்டு துளைக்க முடியாத உலோகத்தில் அல்லவா செய்துள்ளனர்!
பறக்கும் தட்டு வானில் புறப்பட்டது...
விக்டர் - அந்த மினி ரோபோக்கள் ஆபத்தில் உள்ளன! இந்த உலோகப் பிசாசு அவர்களை நோக்கி முன்னே செல்கிறது!
இதை ஆர்ச்சியிடம் விட்டு விடுவதுதான் நல்லது! உன்னாலும் என்னாலும் என்ன முடியும்?


உலோகப் பாம்பு வானளாவிய கட்டி
டத்தைச் சுற்றி வளைத்தது!
கோபுரம் ஆடுகிறது...
ஜாக்கிரதை!
சுற்றுகள் இறுகட்டும்!
எல்லா
மோட்டார்களும் உச்ச
சக்தியில் இயங்கட்டும்!
கோபுரத்தை அழித்து
விடு! எதிரிகளுக்கு நம்
பலத்தைக் காட்டு!
க்ராக்!
அடக் கடவுளே!
கோபுரத்தையே தவிடு
பொடியாக நசுக்கி
விட்டதே!
சற்றைக்கெல்லாம்-
நொடியில் க்சக்கி
விட்டதே!
ப்பூ!
எப்படித்தான் இந்த
பூதத்தை ஜெயிப்பது!



அவசரம்! அபாயத்தில் உள்ளோம்! கமாண்டர் ஆர்ச்சி எங்களைக் காப்பாற்றுங்கள்!
ஆர்ச்சி ஏதாவது செய்! இல்லாவிட்டால் மினி ரோபோக்களை நசுக்கி அழித்து விடும்!
நண்பர்கள் மூச்சு விடவும் மறந்தனர்-
ஆர்ச்சி தயார்! குட்டி நண்பர்களை நொடியில் காப்பாற்றி விடுவேன்!
கயிறு வீசும் பழைய தந்திரம் இப்போதும் பயன் தரும் என்றே நம்புவோம்!
தாவிப் பிடியுங்கள்- நண்பர்களே! கோபுரம் கீழே விழப் போகிறது!
விக்டர், கட்டுப்பாட்டுக் கருவியைப் பிடி! பறக்கும் தட்டை செலுத்திக் கொண்டேயிரு! ஆர்ச்சி கயிறை கெட்டியாகப் பிடித்துக் கொள்ளட்டும்!


மறுகணம்-
எல்லாம் ஏறிவிட்டனர்! ஆர்ச்சியும் சரியான நேரத்தில் வந்துவிட்டான்!
அற்புதமான வேலை இரும்பு மனிதா! அந்தப் பொடியன்களை மட்டும் கீழே போட்டு விடாதே!
மறுகணம் உலோகப் பாம்பு வானை நோக்கி உயர்ந்தது...
நெருப்பு கக்க வாய் திறக்கட்டும்! ம்ம்ம்... க்லிக்!
அங்கே பார் ஆர்ச்சி! இந்த சனியன் நம்மை தப்பிக்க விடாது போல் தெரிகிறது!
புஸ்ஸ்ஸ்...
ஓ நோ - நம்மை நோக்கி தீயை கக்குகிறது! நாம் தொலைந்தோம்!
அப்படியே படுத்துக் கொள்! மற்றதை ஆர்ச்சியிடம் விட்டுவிடு!
உஷ்ணம் நம்மை நெருங்காதபடி செய்து விட்டான் பயல்! சூப்பர் வேலை ஆர்ச்சி!
ஐயா சூப்பர் ஆர்ச்சியாக்கும்!
உஷ்!
ஆர்ச்சியின் மார்புப் பெட்டியிலிருந்து குளிர்ந்த காற்று தீயை நோக்கிப் பாய்ந்தது...!


மியூசியத்திலிருந்து கொண்டு வரப்பட்ட புராதன வெடி குண்டுகள் பறக்கும் தட்டில் இருந்தன...
ஆர்ச்சியின் ஸ்டைலில் - இப்போ தாக்க வேண்டியதுதான்! குறி பார்த்து விட்டேன்!
விடாதே... சைத்தானின் வாயை நோக்கி வெடி குண்டை வீசு! ஒன் - டூ - த்ரீ...
எப்போதும் போல் சாதித்து விட்டேன்! தள்ளி நின்று எனக்கு வழி விடுங்கள்!
ஆர்ச்சி.... மீண்டும் வீசி எறி!
டோமீ!
உலோகப் பாம்பின் கட்டுப்பாட்டு அறையை வெடிகுண்டு அதிர வைத்தது!
பூமியில் குழி பறிக்கும் எந்திரத்தின் விசையைப் போடு! எல்லா மோட்டார்களும் முழு வேகத்தில் இயங்கட்டும்!
நமது எதிரி ரோபோ நாசமாய் போகட்டும்!


மை காட்! உலோகப் பாம்பு பூமியில் குழி தோண்டுகிறது! தப்பி ஓட முயற்சிக்கிறது!
கடைசி குண்டையும் வீசி விட்டேன்! எதிரி திரும்பித் தாக்காதது நமது அதிர்ஷ்டம் தான்!
தப்பி ஓடிய பாம்பு பூமியில் குழி பறித்ததுடன் அதை மூடி விட்டும் சென்றது...
இதற்கு பூலோக முட்டாள்கள் பதில் சொல்லியே தான் தீர வேண்டும்!
நாம் மீண்டும் மேலே வரும்போது, அவர்களைப் பழி வாங்குவோம்!
இதற்கிடையில்...
இனி என்ன செய்வது? அந்தக் கழுகு மூஞ்சிகள் தரைக்கடியில் ஓடி விட்டனர்! அவர்களுடைய பதிலடி உக்கிரமாக இருக்கும்...
ஹம்ம்ம்! வாஸ்தவம்தான்!
மினி ரோபோக்களும் ஆர்ச்சியும் அவசர மாக கூடிப் பேசின...
ஹலோ, என்ன நடக்கிறது? நமக்குத் தெரியக் கூடாத ரகசியம் பேசுகிறார்களா?
கவலைப்படாதே, விக்டர் - ஆர்ச்சியிடம் ஏதாவது ஒரு திட்டம் இருக்கும்!


அதன் பின்னர் பறக்கும் தட்டு கோபுரத்தின் உச்சிக்கு சென்றது...
நமது படையினருக்கு சிக்னல் கொடுத்து விட்டேன்! ரோபோ தொழில்நுட்பக் கலைஞர்கள் நம் வரவை எதிர்பார்த் திருப்பார்கள்!
உன் புதுத் திட்டத்தை எங்களுக்குச் சொல்லக் கூடாதா ஆர்ச்சி? எப்போதும் ஏன் எங்களை குழப்பத்தில் திக்கு முக்காடச் செய்கிறாய்?


மிகப் பெரிய ஒர்க் ஷாப் ஒன்றை அடைந்தனர்...
ஏனெனில், நிபுணனான ஆர்ச்சியின் ஐடியாக்கள் எல்லாம் மனிதர்களுக்குப் புரிவது கடினம்!
விஞ்ஞான மேதை கமாண்டர் ஆர்ச்சியை வரவேற்க எல்லாரும் எழுந்து நில்லுங்கள்!


இங்கு என்னதான் நடக்கிறது? அவர்கள் என்ன தயாரிக்கிறார்கள்?
இந்த மண்டைக்கனம் பிடித்த பயல் நம்மிடம் விஷயத்தை சொல்லித் தொலைந்தால் தேவலை!


ஆர்ச்சி என்ன செய்கிறான் என்பதை அதட்டிக் கேள் தாம்சன்! இதைப் பார்த்தால் பிரமாண்டமான பம்பரம் போல் தெரிகிறது!
வேசர் கதிர்களின் உதவியுடன் வேலை நடக்கிறது!


ஒருவழியாக அந்த விநோதக் கருவி தயாரானது...
அப்பாடி - இப்ப வேலை முடிந்து விட்டது - இதுதான் சுழலும் பஸ்!
ஆர்ச்சியின் ஸ்டைலில் க்ருல்ஸ்களின் உலோகப்பாம்பிற்கு மரண அடி கொடுக்க இது உதவும்!


ஒரு கதவு திறந்தது....
உள்ளே ஏறுங்கள் -ஒன்றும் கவலைப்பட வேண்டாம்! எல்லாவற்றையும் நான் கவனித்துக் கொள்கிறேன்!
உப், அதை நினைத்தால் தான் கவலையாக இருக்கு! தாம்சனுக்கு ஆர்ச்சி மேல் இருக்கும் நம்பிக்கை எனக்கு சுத்தமாக கிடையாது!


பாதுகாப்பு பெல்ட்களை மாட்டிக் கொள்ளுங்கள் -நாம் மேலே கிளம்பத் தயாராவோம்! மானிடர்களுக்குத் தான் இதெல்லாம் தேவை -ஆர்ச்சிக்கல்ல!
நிதானம், இரும்பு மனிதா... உனது ஐடியா என்ன? நீ என்ன சொல்கிறாய்?
அவனைத் துருவித் துருவி கேட்காதே விக்டர், நாமே விரைவில் தெரிந்து கொள்வோம்!



ஜெட் சீறிக் கிளம்பியது...
கெட்டியாகப் பிடித்துக் கொள் விக்டர்!
ஹ்ம்ம்ம்... பயல் நம்மை எங்கே கொண்டு போகப் போகிறானோ?
ஹுர்ரே! விண்வெளிக்குப் போகிறார் கமாண்டர் ஆர்ச்சி!
மேலே கிளம்பிய ஜெட் பக்க வாட்டில் திரும்பியது...
நாம் இப்போது உலோகப் பாம்பை வேட்டையாடப் போகிறோம்!
எ-என்ன? உனக்கென்ன மறை கழன்று விட்டதா ஆர்ச்சி? அந்த உலோகப் பாம்போடு மோதினால் மரணம் சர்வ நிச்சயம்!
இதற்கிடையில் க்ருல்ஸ்களின் உலோகப் பாம்பு பூமிக்கடியில் மிக வேகமாகப் போய்க் கொண்டிருந்தது...
பெரிஸ்கோப்பை உயர்த்து! நமது அடுத்த இலக்கை நோட்டமிடு!
பெரிஸ்கோப் துளை போட்டபடி மேலே செல்லட்டும்!
மோட்டாரை இனி நிறுத்து!


வானளாவிய கோபுரம் எதிரே உள்ளது! அதை அழிக்கத் தயாராகு!
பூமியில் இருப்பவர்கள் மண்டி போட்டு நமக்குப் பணியும் வரை, நம் பாதையில் குறுக்கிடும் எல்லாவற்றையும் நாசமாக்கணும்!
மோட்டார் முழு வேகத்தில் செயல்பட்டது..
உ - உலோகப் பாம்பு!... சுட்டுத் தள்ளுங்கள்!
துப்பாக்கித் தோட்டாக்களோ, கதிர் வீச்சோ அதைத் தடுத்த நிறுத்த முடியாது! தப்பி ஓடுங்கள்!
கோபுரங்கள் முழுவதுமாக காலி செய்யப்படவில்லை!
அங்கே பார்! கொலைகார க்ருல்ஸ்களின் பூதம் தாக்குகிறது! நமது படையினர் சிதறி ஓடு னர்!
அப்படியானால் கமாண்டர் ஆர்ச்சிக்கு சிக்னல் கொடுப்போம்! பயங்கரமான எதிரி அருகில் இருப்பதாக எச்சரிப்போம்


ஆர்ச்சிக்கு சிக்னல் கிடைத்தது...
எங்களுக்கு உதவுங்கள் கமாண்டர் ஆர்ச்சி!
பயப்படாதீர்கள் ஆர்ச்சி இருக்கப் பயமேன்?
இரும்பு மனிதா, கோணங்கித்தனமாய் எதையும் செய்து வைக்காதே! ஜாக்கிரதை!
அங்கே பார் ஆர்ச்சி -தீயைக் கக்கிக் கொண்டு வழியில் உள்ள எல்லாவற்றையும் அழிக்கிறது பாம்பு!
விரைவில் ஆர்ச்சி அதன் கொட்டத்தை அடக்குகிறேன்!
உலோகப் பாம்பு கோபுரத்தை அடைந்தது...
ஆர்ச்சி, நாம் ரொம்பவும் உயரமிழக்கிறோம்....! நீ நீ என்ன செய்கிறாய்?
ஜாக்கிரதைடா மடையா!


சுழலும் பஸ் பாம்பின் வால்பகுதியில் இறங்கியது...
துளைபோடும் வரை பொறுமையாய் இருங்கள்! என்னுடைய திட்டம் அபாரமானது!
அபாரமானதா? -பைத்தியக்காரத்தனம் போல் தெரிகிறது!
பர்ர்ர்! புஷ்ஷ்!
உலோகப் பாம்பு சீறிக்கொண்டு திரும்பியது...
அவசரம்! எதிரி பின்னால் இருக்கிறான்! அதுதான் அந்த ரோபோ...
நம்மை நசுக்கப் பார்க்கிறார்கள் ஆர்ச்சி! உனக்குக் கோடிப் புண்ணியம் - சீக்கிரம் இடத்தைக் காலி பண்ணு!
க்ருல்ஸ்களும் அதைக் கேட்டனர்...
நம்மைத் தாக்கிய எந்திரத்தில் கோளாறு! எதிரியை விரட்டிப் பிடித்து அழி! தலைமை தாங்க ரோபோ ஆர்ச்சி இல்லாவிட்டால் -பூமியில் உள்ளவர்கள் அழிந்து போவார்கள்!
திடீரென்று ஆர்ச்சியிடமிருந்து கூக்குரல் ஒன்று வெளிப்பட்டது. க்ருல்ஸின் ரேடியோவில் அது எதிரொலித்தது...
ஐயோ! ஏதோ தவறு நடந்து விட்டது!... ஜெட் மேலே கிளம்ப மாட்டேன்கிறது...
நாம் உருளுகிறோம்! பின்னால் திரும்பிப்பார் ஒரே புகை!


ஆர்ச்சி என்ன தப்பு நடந்தது?
நமது சுழலும் பஸ் கட்டுப்பாட்டை இழந்து விட்டது! ஆர்ச்சியின் கண்டுபிடிப்பில் ஏ-ஏதோ கோளாறு!


உலோகப் பாம்பு ஆத்திரத்துடன் பாய்ந்தது!
அந்த ரோபோ தலைவன் மட்டும் இல்லாவிட்டால் பூமியே நம்முடையது தான்! எதிரிகளின் எந்திரத்தை அழி! அந்த ரோபோவை அழிப்பது மிக மிக முக்கியம்!


அந்தக் கழுகு மூஞ்சிப் பசங்களுடன் மோதுவது பைத்தியக்காரத்தனம் என்று அப்போதே உன்னை எச்சரித்தேன் ஆர்ச்சி!


வேட்டைக்காரன் வேட்டையாடப்படலானன்...
கமாண்டர் ஆர்ச்சி தோற்று விட்டார்! நாம் தலைவர் இல்லாமல் தவிக்கப் போகிறோம்! பூமி நிச்சயமாக அழிந்து விடும்!
சீக்கிரம் போ! சீக்கிரம்! எப்படியாவது நாம் தப்ப வேண்டும்!
திடீரென்று...
பயங்கரப் பள்ளம்! பெ-பெரிய பள்ளத்தில் போய் விழப் போகிறோம்!
ஐயோ..... ஆர்ச்சிசீசீ
க்ருல்ஸ்களும் இதைக் கண்டு ஆச்சரியமடைந்தனர்!
நில்! எமர்ஜென்சி! உலோகப் பாம்பை நிறுத்து!
நிறுத்த நேரமில்லை! நாமும் பள்ளத்தினுள் விழப் போகிறோம்!
கிழிஞ்சது போ! க்ருல்ஸ்களின் உலோகப் பாம்பும் தலைக்கு மேலே வருகிறது விக்டர்!
ஹ்ம்ம்... நம் சாவின் மூலமாவது பூமியைக் காப்பாற்றப் போகிறோம் என்ற திருப்தி கூட கிடைக்கலியே!
தொப்



எதைப் பற்றியும் கவலை வேண்டாம் -ஆர்ச்சி பார்த்துக் கொள்கிறேன்? எல்லாமே ராஜ தந்திரம்!
ஏ... என்ன ? நீ என்ன சொல்கிறாய் கோமாளி?
எல்லாமே திறமையான -அதே சமயம் கில்லாடித் தனமான நடிப்பு! ஆர்ச்சியிடம் எலெக்ட்ரானிக் மூளை உள்ளது! க்ருல்ஸ்கள் நம்மைப் பின் தொடர வேண்டும் என்பதற்காகவே இப்படிச் செய்தேன்!
அப்படியானால் பஸ்ஸில் எந்தக் கோளாறும் இல்லை! அப்படித்தானே?
மறுகணம் ஜெட் எந்திரத்தை இயக்கிட...
உலோகப்பாம்பு ரொம்பக் கனமானது என்பதால் வெளியே வர முடியாது! ஜல சமாதி! வேறு ஏதாவது கேள்விகள் உண்டா நண்பர்களுக்கு?
நீ...நீ ஏன் இதை முதலிலேயே சொல்லித் தொலைத்திருக்கக் கூடாது?
வாயை மூடு விக்டர்! ஆர்ச்சி ஒரு வழியாக பூமியை காப்பாற்றி விட்டான்!



தரையிறங்கிய உடன்...
தண்ணீருக்கு அடியில் போய் தாக்கக் கூடிய வெடிகுண்டுகளைக் கொண்டு வாங்க- சீக்கிரம்! உலோகப் பாம்பு கடலில் சிக்கியுள்ளது! அதை துவம்சம் செய்ய வேண்டும்!
நம்முடைய ஜெனரல் ஆர்ச்சியின் பராக்கிரமத்திற்கு ஈடே கிடையாது
எனக்கு இன்னும் சந்தேகமாகவே உள்ளது!
ஆர்ச்சி குண்டுகளை வீசியது...
குண்டுகள் உலோகப் பாம்பை நசுக்கி விடும்!
நம் ஐம்பது பேர்களுடைய பலத்தைவிட ஆர்ச்சியின் பலம் அதிகம்!
குண்டு வெடித்ததில் தண்ணீர் சிதறியது...
ஹேய் விக்டர், மேலே எண்ண்ணைக் கசிவு தெரிகிறது! ஆர்ச்சி, நீ வீசிய குண்டு பாம்பைத் தாக்கி விட்டது! தொடர்ந்து குண்டுகளை வீசு!
பூம்! பூம்!
எதிரி அழிந்தான்!
ஆனால் கடலுக்கு அடியில்...
பாதுகாப்புக் கருவியைப் பயன்படுத்து! போலி எண்ணைக் கசிவுகளை வெளியேற்று! அதிக வேகத்தில் மேட்டுப் பகுதிக்குப் போ!


பாதுகாப்புத் தேடிச் சென்ற பாம்பு தனது ராட்சஸத் தலையால் பாறையைக் குடைந்தது...
எதிரி ரோபோ முகத்தில் கரி பூசலாம்! அவன் பயங்கரமான தவறு செய்து விட்டான்!
பூமியில் இருப்பவர்கள் உலோகப்பாம்பு அழிந்து விட்டதாக நினைத்துக் கொண்டிருப் பார்கள்! அவர்களுக்கு பயங்கர அதிர்ச்சியை ஏற்படுத்துவோம்!
பூமி காப்பாற்றப்பட்டு விட்டது என்ற நல்ல செய்தியை நாங்கள் பரப்பப் போகிறோம்!
அந்த உலோகப்-பாம்பு நிஜமாகவே அழிந்துவிட்டதை நாம் உறுதி செய்வது நல்லதில்லையா ஆர்ச்சி?
விக்டர் சொல்வதும் சரிதான்!
அதே நேரம் மனிதர்கள் பதுங்கியிருந்த பாதுகாப்புக் குகை ஒன்றில்...
நோ! நோ! அங்கே பார்!
இது உலோகப் பாம்புதான்! க்ருல்ஸ் நம்மிடமே வந்து விட்டனர்! நாம் தொலைந்தோம்!


அங்கே-
விர்ரூம்!
ஓ.கே.! கடலுக்கு அடியில் உலோகப் பாம்பு உடைந்து கிடப்பதை இப்போது உறுதி செய்து விடலாம்!
உலோகப் பாம்பை அவ்வளவு எளிதாக அழித்து விட முடியாது என்று விக்டர் நினைக்கிறான்!
நான் நினைத்தது நூற்றுக்கு நூறு சரிதான்! சுற்றிலும் பாருங்கள்! கண்ணில் உலோகப்பாம்பு எதுவும் தெரிகிறதா?
நீ பெரிய சந்தேகப் பேர்வழி விக்டர்!


உலோகப் பாம்பைக் காணாமல் நண்பர்கள் முகத்தில் கவலை ரேகை படிந்தது...
அங்கே பார் - உலோகப் பாம்பு பாறையைக் குடைந்துள்ளது!
ஓ, நோ! நாம் தப்புப்பண்ணி விட்டோம்! அந்த சைத்தான் அழிந்து போகவில்லை! தப்பியும் போய்விட்டது!


ஓடுங்கள்! ஓடுங்கள்!
க்ராாக்!
க்ருல்ஸ் பூமிக்கடியிலிருந்து வருகின்றனர்!
நாம் தொலைந்தோம்!


கலத்தின் முன்னே ஒரு வீடியோ திரையில் ....
அந்நிய ரோபோவை எச்சரிக்கிறோம்! க்ருல்ஸ் ஆகிய நாங்கள் பூமியை அடிமைப் படுத்தப் போகிறோம்!
ஆண்டவனே... காலம் கடந்து விட்டது ஆர்ச்சி!
பிணைக் கைதிகளாக மக்கள் பிடிபட்டிருந்தனர் –
தளம் எண் ஒன்பதில் தரையிறங்கி சரண் அடையவும்! இல்லையேல் அனைவரையும் சாம்பலாக்கி விடுவோம்!
வேறு வழியில்லை ஆர்ச்சி ....
இம்முறை தோற்று விட்டோம்!
ARCH
ஹ்ம்ம்... சிக்கலான சூழ்நிலை தான்!


திடீரென்று சுழலும் பஸ் தட்டுத் தடுமாறியது...
ஆர்ச்சி - நீ என்ன செய்கிறாய்? இருந்த பஸ் மீண்டும் தள்ளாடுதே...?
கவலைப்படாதீர்கள் -அவசரமாகத் தரையிறங்க வேண்டியுள்ளது!
இந்தக் காட்சியை க்ருல்ஸ் தூரத்தில் இருந்தபடிக் கண்டனர்...
எதிரி ரோபோவே, தில்லு முல்லு எதுவும் செய்ய முயற்சிக்காதே -இல்லையேல் ஏராளமான அப்பாவிகள் எரிந்து சாம்பலாகி விடுவார்கள்!
சுழலும் பஸ் பிரம்மாண்டமான ஒர்க்ஷாப்பில் தரையிறங்கியது...
க்ருல்களுக்கு ரோபோ ஆர்ச்சியின் பதில்: எங்களுடைய எந்திரத்தில் கோளாறு ஏற்பட்டுவிட்டது! ஆனாலும் உங்களுடைய கட்டளைக்குக் கீழ்படிகிறோம்! கோளாறை சரி செய்த உடன் எங்களை நீங்கள்
எங்கு தரையிறங்கச் சொல்கிறீர்களோ -அங்கேயே வருகிறோம்!
அட ஆண்டவா!
அப்படியே நில்லுங்கள்! நானே ஒரு கோளாறை சரி செய்யப் போகிறேன்!
தாம்சன் - பயலுக்கு மறை கழன்று விட்டதென நினைக்கிறேன்! என்னதான் செய்யப் போகிறான்?
நமக்கேன் வம்பு விக்டர்? ஆர்ச்சியிடம் கவலையை விட்டு விடுவோம்! நம்மால் என்ன செய்ய முடியும்?



ஆர்ச்சி வேகமாக ஓடிவந்து நண்பர்களுடன் நின்று கொண்டது. மறுகணம்-
ஆ! ஆர்ச்சி நீ சரியான கோமாளி! நா.. நாம் தீயில் கருகப் போகிறோம்!
ஆண்டவனே உஷ் இந்த - உஷ்ணம்...!
ஆனால் சில நிமிடங்களுக்குப் பின்னர்...
க்ருல்ஸ் - நான் தான் ஆர்ச்சி கூப்பிடுகிறேன்! நீங்கள் சொன்ன இடத்தில் தரையிறங்கப் போகிறோம்!
ஆர்ச்சியின் செய்தி க்ருல்ஸ்களுக்குக் கிடைத்தது..
முட்டாள் கீழ்ப்படிந்து விட்டனர்! உலோகப் பாம்பை அங்கே கொண்டு போங்கள்! ஏவுகணைகளை அதனுள் ஏற்றுங்கள்! எதிரி ரோபோவையும் சுழலும் பல்லையும் அணுக்கதிர்களுக்கு இரையாக்குவோம்!
நமது இலக்கிற்குள் எதிரிகள் வந்த உடன் ஏவுகணைத் தாக்குதலுக்குத் தயாராகு!


ஆர்ச்சியின் சுழலும் கலத்திலிருந்து ஒரு சிக்னல் வந்தது...
க்ருல்ஸ்களுக்கு, கமாண்டர் ஆர்ச்சியின் செய்தி! நீங்கள் உத்தரவிட்டபடி தரையிறங்கப் போகிறேன்! மேற்கொண்டு உத்தரவுக்காக காத்திருக்கிறோம்!
ஹெ! ஹெ! பயல்களின் கதை க்ளோஸ்!
உலோகப் பாம்பின் வாய் பிளந்தது... இலக்கை நோக்கி ஏவுகணைகள் பறந்தன!
வீர்ஷ்!
சாவதற்குத் தயாராகுங்கள்!
அதைத் தொடர்ந்து பயங்கரமான வெடிச் சப்தம் கேட்டது!
டூம்!
கூண்டோடு கைலாசம் தான்! தலைவலி தந்து வந்த அந்த ரோபோ ஒரேயடியாக ஒழிந்தது!


ஆனால் க்ருல்ஸ்களின் எண்ணம் தவறானது! சில மைல்களுக்கு அப்பால் அந்த விநோதமான கட்டிடத்தில்..
அபாரம் - உன் திட்டப் படியே பயல்கள் ஏமாந்திருப்பார்கள்! நீ பெரிய கில்லாடி தான்!
க்ருல்ஸ்களை மட்டுமல்லாமல் என்னையும் இது முட்டாளாக்கிக் கொண்டிருக்கிறது! இங்கு என்னதான் நடந்தது ஆர்ச்சி?
ஒரே போன்ற மாதிரியைத் தயாரிக்க நான் டூப்ளிகேட்டர் எந்திரத்தைப் பயன்படுத்தினேன்! இது முதலில் போட்டோ எடுத்த பின்பு அதில் உள்ளதை அப்படியே தயாரிக்கும்!
வாவ்! நம்முடைய சுழலும் பஸ் மாதிரியைத் தயாரித்து அதையே விண்ணில் ஏவி விட்டாயாக்கும்!
நகல் உருவங்களைத் தாங்கிய சுழலும் பஸ்ஸையே க்ருல்ஸ்கள் குறி வைத்து தாக்கின! "



சில நிமிடங்களுக்குப் பின்னர் -
ஆர்ச்சி புத்திசாலி! நாம் க்ருல்ல்களை திகைக்கச் செய்யப் போகிறோம்!
ஆர்ச்சி வசம் நிச்சயம் ஏதாவது திட்டமிருக்கும்!
ஹேய்... எதற்காக குழி பறித்துக் கொண்டிருக்கிறோம்?
இதற்கிடையில்...
அந்த எதிரி ரோபோ உண்மையில் அழிக்கப்பட்டு விட்டதா என்பதை நாம் சோதித்து அறிவோம்!
ரொம்ப ஜாக்கிரதையாக இருக்கணும்! அந்த ரோபோ எக்கச்சக்கமாய் தந்திரங்களைச்-செய்யக் கூடியது!
கேட்கிறேனே - என்று கோபித்துக் கொள்ளாதே ஆர்ச்சி - ஆனால் இப்ப நாம் எங்கே போகிறோம்?
முதலில் நாம் பணயக் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும்! அதன் பின்பு உலோகப் பாம்பு எங்கிருந்தாலும் போய் மடக்க வேண்டும்!
பணயக் கைதிகள் அனைவரும் ஓர் அறையில் கூடியிருந்தனர் - அப்போது திடீரென்று...
உலோகப் பாம்பு திரும்பி விட்டது! நம்முடைய தோழர்களை நாம் வரவேற்போம்!
க்ராக்!
நோ... பொறு! ஏதோ தவறு நடந்து விட்டது!




29


சுழலும் பல் பூமிக்கு மேலே சுதந்திரமாக வெளியே வந்த உடன்...
ஜூம்!
நோ! இது ஒருக்காலும் இருக்க முடியாது! ரோபோ அழிந்து போனதைத் தான் நாம் கண்டோமே!
டூம்!
ஐயோ!
கண்ணால் காண்பதெல்லாம் மெய்யல்ல பாய்ஸ்!
கதிர் வீச்சுத் துப்பாக்கிகளை அவர்கள் பயன் படுத்தும் முன்பு வளைத்துப்பிடி ஆர்ச்சி!
ஆ!
மடோர்!
தாக்குங்கள்! தாக்குங்கள்!
சுதாரிக்க சமயம் கொடுக்காமல் தாக்குதல்ல நடத்துங்கள்!
உப்!
சில நிமிடங்களில் எல்லாம் முடிவடைந்தது...
அந்த சனியனை நினைத்தால் தான் வயிற்றைக் கலக்குகிறது!
கயிற்றைத் தேடி எடுத்து - இவன்களைக் கட்டிப் போடுங்கள்!
ARCHIE
இனி அந்த உலோகப் பாம்பு ஒன்று தான் பாக்கி!


ஆனால் ஆர்ச்சி சளைக்கவில்லை -
ஹுர்ரே! கமாண்டர் ஆர்ச்சி புதியதொரு திட்டம் போட்டுள்ளார்!
அவர்கள் சொல்வது சரியாக இருந்தால் சரிதான்!
நாம் மீண்டும் பாதாளத்திற்குப் போகிறோம்...!
உலோகப் பாம்பு அதிக தூரத்தில் இருக்கவில்லை...
பூமிக்கு மேலே வந்து விட்டோம்!
அவசரம்! அவசரம்! எங்களுக்கு முன்னால் பெரும் அபாயம்!
நாசமாய்ப் போக! நம்மை ஏமாற்றி விட்டனர் - இது ரோபோ ஆர்ச்சிதான்! அவனை ஒழித்துக் கட்ட ஏவுகணைகளை வீசுங்கள்! இந்த முறை ஆர்ச்சி தப்ப முடியாது!


ஆர்ச்சி சுழலும் பஸ்ஸின் லாக்கரிலிருந்து கனத்ததொரு இரும்புச் சங்கிலியை எடுத்தது. அதன் பின்...
ஏய் - மறை கழன்று விட்டதா உனக்கு? எ - என்ன செய்யப் போகிறாய்?
நீங்கள் வாகனத்தைக் கவனித்துக் கொள்ளுங்கள்! ஐயாவுக்கு வேலை வந்து விட்டது!
ஆர்ச்சியின் ஜெட்கள் விர்ரென்று கிளம்பின...
தாம்சன் இந்தப் புதிரான கலத்தை எப்படிச் செலுத்துவது?
எனக்கும் தெரியாதே விக்டர்!
நாகத்தின் வாய் பிளந்தது...
குறிபார் - எதிரியின் கலத்தை நாசமாக்கு!
அந்த விசையை இழுத்துப் பார் விக்டர்!
முயற்சி செய்து கொண்டுதான் இருக்கிறேன் - முடியலியே!


அதே நேரம் -
கழுத்தில் மாட்டியுள்ள சங்கிலியை பின்பக்கமாக - பலமாக இழுக்கப் போகிறேன்! நண்பர்கள் ரொம்பவும் தான் கவலைப் படுகின்றனர்!
ஏவுகணை ஏவப்பட்ட அதே கணம் ஆர்ச்சி நாகத்தின் கழுத்தை பலம் கொண்ட மட்டும் சங்கிலியால் இழுத்தது...
உஷ்! க்ருல்ஸ்களின் குறி தப்பி விட்டது!
தொலைந்தோம்!
பதட்ட மடையாதே! அவர்கள் குறி தப்பி விட்டது!
இந்தப் பரபரப்பான காட்சியை பூலோகவாசிகளும் மினிரோபோக்களும் மெய் மறந்து கண்டனர்...
அங்கே பாருங்கள்! கமாண்டர் ஆர்ச்சி உலோகப் பாம்பு மீது சவாரி செய்கிறார்! அவர் வீராதி வீரர் தான்!
அவரைக் கண்டு க்ருல்ஸ் நடுங்குவதில் ஆச்சரியமில்லை! ஆர்ச்சி மாவீரன் தான்!


உலோகப் பாம்பை இயக்கும் கட்டுப்பாட்டு அறையில் பதட்டம்!
அவசரம்! உலோகப் பாம்பை பூமிக்குள் டைவ் அடிக்கச் செய்!
முழு சக்தியுடன் செல்லட்டும்! முழு சக்தியுடன் பூமிக்குள் போகட்டும்! நம்மீது எதிரி ரோபோ உட்கார அனுமதிக்கக் கூடாது!
ஆர்ச்சி உடும்புப் பிடியாகப் பிடித்திருந்தது -
வாவ்! உலோகப் பாம்பு பூமிக்குள் குழி தோண்டித் தப்ப முயல்கிறது... ஆனல் ஆர்ச்சி தடுத்து விட்டேன்! கடித்துக் குதறும் இதன் தலையை மேலே தூக்கிய படி வைத்திருக்கப் போகிறேன்! ஆர்ச்சியா கொக்கா?
இறுதியில் உலோகப் பாம்பிற்குள் ஏதோ ஒரு சப்தம் எழுந்தது...
அப்படிப்போடு ஆர்ச்சி!
பூம்
ஆ! குளிரூட்டும் எந்திரம் வெடித்து விட்டது!
ஸ்க்ஸ்ஸ்!
தீப்பிடித்து விட்டது! எந்திரத்தைக் கை கழுவி விடுங்கள்



உலோக பூதம் முடமாகிக் கீழே சாய்ந்தது...
ஆர்ச்சி சாதித்து விட்டான்! உலோகப் பாம்பை தகர்த்து விட்டான்!
ஆர்ச்சியின் செயல் திறன் மீது நான் சந்தேகப்பட்டது தவறுதான்!
ஹுர்ரே!
மறுகணம் சுழலும் பஸ் தரையில் மோதியது!
உணர்ச்சி வயப்பட்டு விட்டாய் விக்டர்! களிமண் தரையில் நாம் மோதியதால் அதிர்ஷ்ட வசமாகப் பிழைத்தோம்!
நண்பர்கள் சுத்த உதவாக் கரைகள்! பூலோகவாசிகளே எனக்கு ஒரு கை கொடுங்கள்! நான் இன்னும் க்ருல்ஸ்களை கவனிக்க வேண்டியுள்ளது!
க்ராஷ்
உலோகப் பாம்பிற்குள்ளிருந்த க்ருல்ஸ்கள் கதிர்வீச்சுத் துப்பாக்கிகளுடன் வெளியே வந்தனர். ஆனால்...!
பூலோக வாசிகளை அழியுங்கள்!
ஆ! நம்முடைய ஆயுதங்கள்..!
என்னிடமிருந்து வரும் காந்த சக்தி பசங்களா! இது உங்களிடமுள்ள உலோகத் துப்பாக்கிகளைப் பறித்து விட்டது... ஆர்ச்சியிடம் அடி பணியுங்கள்!




பிரகாஷ் பப்ளிஷர்ஸ் சார்பாக லயன் காமிக்ஸ் மாத இதழை அச்சிடுபவரும் வெளியிடுபவரும், ஆசிரியரும் - S. விஜயன். முகவரி : பிரகாஷ் பப்ளிஷர்ஸ், தபால் பெட்டி எண் : 374, சிவகாசி - 626 123. போன் : 20649.
அச்சிட்டோர் : தி விஜய் புக்ஸ், சிவகாசி - 626 123.

முற்றும்

# "மாதம் ஒரு வாசகர்"



| | | |
|---|---|---|
| வாசகர் பெயர் | : | **R. ராஜ்குமார்** வயது : 23 |
| முகவரி | : | 7, Redfort Hostel, TNAU,<br>Coimbatore - 3. |
| கல்வித் தகுதி | : | I M.Sc., (Ag) in Plant Breeding & Genetics |
| லயன் காமிக்ஸ் படிப்பது எத்தனை காலமாய்? | : | ஆரம்பித்தது, ஸ்பைடரின் 'கடத்தல் குமிழிகளி' லிருந்து-அதன் பின் முந்தய இதழ்களையும் படித்து விட்டேன். |
| நீங்கள் படிக்கும் இதர பத்திரிக்கைகள் என்ன? | : | Journals of Cytology,<br>Breeding and Genetics |
| ரசித்துப் படித்தது எந்தக் கதை? | | **லயன் :** அதிரடிவீரர் ஹெர்குலஸ், அனைத்து "டெக்ஸ்" கதைகள் **திகில் :** இரத்தப்படலம் I, II, III, IV |
| உங்களைத் தவிர வேறு யாரும் வீட்டில் லயன் காமிக்ஸ் படிக்கிறார்களா? | : | அண்ணன், அம்மா |
| படித்து முடித்த பின் இதழை என்ன செய்வீர்கள்? | : | அனைத்தையும் சேகரித்து வைத்திருக்கிறேன் (பக்கத்து வீட்டுப் பொடியனால் ஒரு சில missing) |

# கதை சொல்லும் படங்கள் - 6

**S. விஜயன்**

படங்கள் மூலம் கதை சொல்லும் யுக்தி - காமிக்ஸுக்கும், சினிமாவுக்கும் பொதுவானது! ஆனால் சினிமாவையும் கூட சில விஷயங்களில் தூக்கிச் சாப்பிட்டு விடும் ஆற்றல் காமிக்ஸ்க்கு உண்டு! எப்படி என்று யோசிக்கிறீர்களா?

பல்லாயிரக்கணக்கான சிப்பாய்கள் போரிடுவதாக ஒரு காட்சியினை திரையில் காட்ட வேண்டுமென்றால் எக்கச்சக்கமான பணச்செலவு; ஏராளமான துணை நடிகர்கள் etc.. etc.. தேவை! ஆனால் அதே சீனை காமிக்ஸில் காட்டுவதென்பது சுலபம்! (ஆர்ட்டிஸ்டின் முதுகெலும்பு தேய்ந்து விடுமென்பது வேறு விஷயம்)

ஆனால் - சினிமாவில் தெரிவிக்க முடிகின்ற உணர்ச்சிபூர்வமான கதைகளை காமிக்ஸில் வெற்றிகரமாகக் கொண்டு வருவது மிகவும் கடினம்! 'ஜுராஸிக் பார்க்கின்' பிரம்மாண்டத்தை காமிக்ஸிலும் தெரிவிக்கலாம் - ஆனால் ..................... ன் உணர்ச்சிகளை காமிக்ஸில் பிரதிபலிக்கச் செய்வது சுலபமான காரியமல்ல! இரத்தப் படலம் கதைத் தொடர் இதற்கு ஓர் விதிவிலக்கு!

ஆகையால் காமிக்ஸிற்கு ஏற்ற கதையைத் தேர்ந்தெடுக்கும் வேலையில் கவனம் தேவை! பொதுவாகவே - எக்கச்சக்கமான வசனங்களை தவிர்த்து சம்பவங்களுக்கும், சஸ்பென்ஸிற்கும் முக்கியத்துவம் கொடுக்கும் கதைகள் வெற்றி பெறுவதுண்டு!

அடுத்த விஷயம் - கதையின் நீளம்! அமெரிக்க காமிக்ஸ்கள் பெரும்பாலும் 20 பக்கங்களில் முடிந்துவிடும். ஜப்பானிலோ ஒரு காமிக்ஸ் 300 பக்க நீளத்திற்குப் போவது வழக்கம்! ஆகையால் 20 பக்க காமிக்ஸ் மார்கெட்டிற்கு "மகாபாரதத்தை" கதையாகத் தேர்வு செய்வது தோல்விக்கு உத்திரவாதமான வழி!

"இரத்தப் படலம்" கதைத் தொடரைப் பற்றிய ஒரு விஷயத்தை இங்கே எழுத நினைக்கிறேன்; இது வரை இரத்தப் ப்டலம் 10 பாகங்கள் அயல் நாட்டில் வெளிவந்துள்ளது. பதினோறாவது பாகம் தயாராகி வருகிறது! 1985ல் ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கதை 10 ஆண்டுகள் கழித்தும் தொடர்கிறதென்றால் அது சாதாரண விஷயமல்ல! ஒவ்வொரு பாகமும் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாக இருந்தாலும் கூட - ஒவ்வொரு பாகத்தையும் தனிக்கதையாகப் படித்து ரசிக்க முடியும் என்பதுதான் இதன் சிறப்பே! மிகவும் நுணுக்கமானதொரு கருவை - பத்துப் பன்னிரெண்டு பாகங்களாகப் பிரித்து - பத்து வருட இடைவெளியை மறக்கச் செய்து உணர்ச்சிபூர்வமான கதையாகத் தரும் ஆசாமி இவர்தான்!



வான் ஹேமே
(இரத்தப் படலம் கதாசிரியர்)



வில்லியம்
(XIII ஓவியர்)

கதை தேர்ந்தெடுப்பது பற்றி இதுவரை எழுதிய விஷயங்கள் அனைத்துமே - முழு நீள காமிக்ஸ் இதழ்களுக்குப் பொருந்தும்! நியூஸ் பேப்பர்களில் நாம் பார்க்கும் கார்டூன் துணுக்குகளுக்கு (Strips என்று பெயர்) கதை எழுதும் பாணியே தனி! பெரும்பாலும் இந்தத் துணுக்குகள் ஹாஸ்யத்தைப் பிரதிபலிப்பது வழக்கம்.

மூன்று கட்டங்களில் முடியும் துணுக்குகளில் இதோ ஒரு சாம்பிள் :




இது போன்ற கார்டூன்களுக்கு சுலபமான பார்முலா உண்டு! முதல் கட்டத்திற்கு - establishing shot - அதாவது சூழ்நிலையை தெரிவிக்கும் கட்டம் என்று பெயர். இரண்டாவது கட்டம் - ஹாஸ்யத்திற்கான அடித்தளம், கடைசிக் கட்டத்தில் punchline - அதாவது நகைச்சுவையின் மையம்! இது போன்ற துணுக்குகளை வெற்றிகரமாக உருவாக்கிட அருமையான நகைச்சுவை உணர்வு இருந்திட வேண்டும்!

3 கட்ட கார்டூன் துணுக்குகளுக்கு ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் கூடுதலாக இடம் ஒதுக்கப்படுவதைக் காணலாம்! "சிரிப்பின் நிறம் சிவப்பு" இது போன்ற வகைதான்! ஹாஸ்யத்தை சற்றே விரிவாக இதில் சொல்லிட வாய்ப்புக் கிடைக்கும்!

சர்வதேச அளவில் வெற்றி பெற்ற கார்டூன்களில் **Peanuts** எனும் தொடர் மிகவும் பிரசித்தி பெற்றது. (இண்டியன் எக்ஸ்பிரஸில் வரும் cartoon இது) சார்லஸ் ஷூல்ட்ஸ் எனும் ஓவியரால் உருவாக்கப்பட்ட இந்தத் தொடர் - கதை விற்பனை மற்றும் விளம்பர வருவாய் மூலம் ஈட்டும் தொகை எவ்வளவு தெரியுமா? ஆண்டொன்றிற்கு சுமார் 200 கோடி ரூபாய்!

மயக்கம் போட்டு விடாதீர்கள்.



- தொடரும்



வாசகர் ஸ்பாட்-லைட்!
பரட்டை தலை ராஜா!
கதை, வசனம், படம்: தி.ரமேஷ்
ஆகா! என் வால் எவ்வளோ அழகு!
ஆமா! ஆமா!
ஆஹ அந்த தடியனைப் பாரு! வாலே இல்ல! பாவம்!
ஆஹ எங்க இனத்துல சிங்கவால் குரங்கு இருக்கு பரட்ட!
ஹி! ஹி!
டுமீல்!
க-கா- -காப்பாத்துங்க!


டுமீல்!
பரட்டையின் வால்
வேட்டைக்காரனின்
பொறியில் சிக்கியது!
டுமீல்!
ஆ!
க்ளிக்!
பரட்டை வேகமாக
இழுத்தபோது முடி
கொட்டி விட்டது!
டுமீல்! க்ர்ராக்!
பொறி வாயில்
இருந்து
கழன்ற
வேகத்தில்
ஆ! சத்!
யாஹூ! வேட்டைக்
காரன் மயக்கம்
போட்டுவிட்டான்!
நம் அரசர்
வேட்டைக்காரனை
வீழ்த்திட்டார்!
அதோ போகுது நமது
பேரரசர் 'குரங்கு வால்
சிங்கம்!'
முற்றும்!



# க்ரைம் க்விஸ் (16) விடை

"பச்சை வனப் பாவை" இதழில் வெளியான க்ரைம் க்விஸ் (16) மிக சுலபமானதாக அமைந்ததால் ஏராளமான சரியான விடைகள்! பரிசு பெறும் மூன்று அதிர்ஷ்டசாலி வாசகர்கள் :





1) H. முஹம்மது தமீம்,
3/49, தெற்குத் தெரு,
பிராக்கிராமம் (P.O.)
திட்டச்சேரி - 609 703
நன்னிலம் (T.K.)

2) S. முல்லைநாதன்,
S/o. T. சுந்தரம்,
2/115, வடக்குத் தெரு,
காட்டுச்சேரி (P.O.) -609 303
அய்யபாடி (Via)

3) T.M. ராஜ்குமார்,
S/o. T. மாரியப்பன்,
46, அன்சாரி வீதி,
பொள்ளாச்சி - 642 001.

இந்த வாசகர்களுக்கு நமது வாழ்த்துக்களுடன் ஒரு லயன் டி-ஷர்ட்டும், கீ-செயினும் அனுப்பப்படுகிறது! இனி சரியான விடையைப் பார்ப்போமா?

## விடை

*கொலையாளி கையில் மாவுக்கட்டை போட்டுக் கொண்டு குடல் புண் சிகிச்சைப் பிரிவில் அமர்ந்திருந்தால் இன்ஸ்பெக்டர் டேஞ்சர் எளிதில் கண்டுபிடித்து மடக்கி விட்டார்.*






ஜூனியர் & சீனியர்!
கதை: S. விஜயன் • சித்திரம்: சிகாமணி
'குளிக்கப் போன்னு' சொன்னது காதில் விழலையா?
இல்லேம்மா... இன்னைக்கு நான் குளிக்கப் போறதில்லை!
முதுகில் ரெண்டு போட்டேன்னாதான் வழிக்கு வருவே!
என்னோட கிரக நிலைகள் இன்னைக்கு தண்ணீர் சகவாசம் ஆகாதுன்னு சொல்லுதம்மா...!
என்னோட ராசிபலன்கள் முழுசையும் தெளிவா படிச்சுப் பார்த்துட்டுத் தான் இந்த முடிவுக்கு வந்திருக்கேன்மா! விதியோட விளையாடுவது தப்பு!
அடச்சே... இந்தப் பெரியவங்களுக்கு விவஸ்தையே கிடையாது!
கவலைப் படாதே! அடுத்த எலக்ஷன்லே நான் ஜெயிச்சுட்டா பெரியவங்களுக்கு எந்த அதிகாரமும் கிடையாதுன்னு சட்டம் கொண்டு வந்திடறேன்!




# லயன் Top 10 ஸ்பெஷல்!

உங்கள் அபிமான சூப்பர் ஸ்டார்களின் 10 'top' படக்கதைகளோடு 400 பக்க பம்பராக இந்த வருடத்துக் கோடை மலர் வருகிறது!

**விலை ரூ. 25/-**

ஸ்பைடர், ஆர்ச்சி, டெக்ஸ் வில்லர், மின்னல் மனிதன், மிஸ்டர் ஜெட், லக்கி லூக், மின்னல் படை, சி.ஐ.டி. கார்கன், ரிப் கிர்பி, மீட்போர் ஸ்தாபனம், ரிப்போர்ட்டர் ஜானி, கேப்டன் பிரின்ஸ், இரட்டை வேட்டையர், ஏஜெண்ட் XIII, பாலண்டைன் etc... என்றதொரு அட்டகாசமான பட்டாளத்திலிருந்து 10 ஹீரோக்கள் உங்களை சந்திக்க வருகிறார்கள். யார் அந்த "Top 10" என்பது சஸ்பென்ஸ்!

## முன் பதிவுக் கூப்பன்

*மே '95ல் வரவிருக்கும் லயன் Top 10 ஸ்பெஷலில் எனக்கு ஒரு பிரதி கட்டாயம் வேண்டும். பதிவுத் தபால் மூலம் அனுப்புவதற்காக ரூ. 27/- மணி ஆர்டர்/டிராப்ட் மூலம் இன்று அனுப்பியுள்ளேன். எனது முகவரி:*

*பெயர்:* ______________________

*முகவரி:* ______________________

______________________

*பின்கோடு:* __________

★ மணி ஆர்டர் அல்லது டிராப்டு "PRAKASH PUBLISHERS, SIVAKASI" என்ற பெயருக்கு அனுப்பிட வேண்டும்.

★ ஏப்ரல் 20க்குள் அனுப்பப்படும் ஆர்டர்களுக்கு மட்டுமே பிரதிகள் உறுதியாகக் கிடைக்கும். அதன் பின்னர் வரும் ஆர்டர்களுக்கு பிரதிகள் ஸ்டாக் இருந்தால் மட்டுமே அனுப்ப இயலும்.



கோடையின்
கடுமைக்கு
'Take it easy'
சொல்லுங்கள்!
லயன்
காமிக்ஸ்
மே 1ல் வருகிறது
லயன் Top 10 ஸ்பெஷல்!
418- பக்க காமிக்ஸ் களஞ்சியம்!
விபரங்கள் உள்ளே!